உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

[தொகுதி உ௰.] துர்மதி-ஷூ பங்குனி-மீ [பகுதி ரு.
Vol. XX. March—April—1922. No. 5.

## உள்ளுறை.



பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்
பதிப்பு.

[வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா-8.
வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

[தொகுதி உ௰.] துர்மதி- ஹு பங்குனி-மீ [பகுதி ரு.

Vol. XX. March—April—1922. No. 5.

## தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி.

நல்லிசைப்புலவரெல்லோராலும் நன்குமதிக்கப்பட்டதும், பல்லாயிர ாண்டுகட்குமுன்பே தோன்றியதுமான தொல்காப்பியப் பொருளதிகா த்துட் சொல்லப்படும்பொருளின்னவெனத் துணிவுறவேண்டியும், மிழ்ப்பெருங்கல்வியைத் தழைப்பிக்கவிரும்பியும், தமிழறிஞரிற் றக் காரையறிந்து பரிசளிக்கக்கருதியும் கொழும்புமாநகர்ப் பெருஞ்செல் ரு ளொருவராகிய ஸ்ரீமான் Dr. ஸ்ரீகாந்தமுதலியாரவர்கள் தொல்காப் யப் பொருளதிகாரவிடயம்பற்றிப் பண்டிதரெழுதுமாராய்ச்சியிற்சிறந்த தொன்றற்கு 200 ரூபா பரிசளிப்பதாக 1912-ம் ஹு பத்திரிகைகளிற் ரசுரம்செய்வித்திருந்தது கண்டு, அப்பொழுது மதுரைத் தமிழ்ச்சங் கத்திற் செந்தமிழ்ப் பத்திராசிரியராயிருந்து இப்பொழுது சென்னையில் மிழ் லெக்ஸிகன் கமிட்டியில் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருக்கிற ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள், தாம் அரிதிற்படித்துணர்ந்த பல நூல்களாலுந் துணிந்த பொருளதிகாரவிடயங்களைத் தொகுத்தெழுதி னுப்பிய இவ்வாராய்ச்சியே மற்றையோரெழுதியவற்றினின்றும் மேலாக மதிக்கப்பட்டுப் பரிசளிக்கப்பெற்ற பெருமையுடையதாயிருக்கிறது. லும், அது மதுரைத் தமிழ்ச்சங்கத்தாராலும் ஆதரிக்கப்பட்டுத் மிழ்ச்சங்கப்பிரசுரமாகவும் வெளியிடப்பட்டிருக்கிறது. இதில், பண் டைக்காலத்துத் தமிழ்மக்களது ஒழுக்க வழக்கங்களும், அறம்பொரு ளின்பங்களை யடையுமுறைகளும், கற்றுவல்லபுலவர்கள் செய்யுளியற்றுங் ப்பாடுகளும், சொல்வழங்கும் மரபுகளும், பிறவும் பயில்வார் அறியும் காட்டப்பட்டுள்ளன. தமிழ்மொழிக்கும் தமிழர்க்குமுரிய சரித்திர ராய்ச்சிசெய்வார்க்கும், பொருளதிகாரம் படிக்கப்புகுவார்க்கும் இது கவும் பயன்படத்தக்கது. தெளிவான செவ்விய தமிழ்நடையுடையது. ண்டிதபரீக்ஷை, வித்வான்பரீக்ஷைகளுக்குப் பாடமாகவைக்கத்தக்கது. இவ்வாறான ஆராய்ச்சி மேன்மேல் வெளிவருமாறு ஆண்டுதோறுந் தூண்டு வாருண்டாயின் ஊன்றிய தமிழ்நூலுணர்ச்சி இவ்வுலகிடைப்பரவி நிலை பெறுமென்பது உறுதியே. இதன்விலை ரூபா ஒன்று.

பத்திராதிபர்.

## நல்லந்துவனார்சோதிடப்பொருத்தமும் காலமும்.

செந்தமிழ்த் தொகுதி-௰கூ பகுதி பதினொன்றில் ஆசிரியர் நல்லந்துவனார்பாடிய பரிபாடற் பதினோராவதுபாட்டிற்கண்ட கிரகநிலைகளின் மேல் எழுந்த ஆக்ஷேப சமாதானங்களைப்பற்றி நடந்த வாதப் பிரதிவாதங்களைச் செந்தமிழ்ச்செல்வர்கள் கண்ணுற்றிருக்கலாம். இவ்விஷயம் அவ்வாதத்தை யாரம்பித்து முற்றுவிக்கவும் மேலுமேலும் ஆராய்ச்சி செய்விக்கவும் தூண்டிய நியாயவாதி ஸ்ரீமத். R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கட்குத் தமிழுலகமே கடப்பாடுடையதாம். அவர்கள் இவ்வாதத்தைக் கிளப்பாவிடின் இன்னும் வெளிவரக்கூடிய பல விஷயங்கள் வெளியாகாமலே நின்றுவிடும்.

முதலாவதாகப் பண்டித சாஸ்திரிகள்கூறிய

சதுர்த்தே பவநே ஸூர்யாஜ் ஜ்ஞஸிதௌ பவத: கதம்

என்ற பிற்பகுதிச் சுலோகத்தில், ஸூர்யாத் - சூரியனுக்கு, சதுர்த்தே பவநே - நான்காவது ராசியில், ஜ்ஞ-புதனும், ஸிதௌ-சுக்கிரனும், கதம்-எப்படி, பவத:-இருக்கக்கூடும் என்ற வினாவை ஆசாரிய வராஹமிஹிரர் எழுப்பியுள்ளார். நமக்கோ சூரியனிருக்கும் இராசிக்கு மூன்றாவது இராசியிற் புதனும், சூரியனிலிருந்து நான்காவது இராசியிற் சுக்கிரனும் இருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. வராஹமிஹிரரோ புதசுக்கிரர்கள் இருவரும் நான்கு இராசி தள்ளியிருப்பது எப்படி என்கின்றனர். இச்சுலோகத்தின் முற்பகுதியோ,

பூர்வசாஸ்த்ராநுஸாரேண மயா வஜ்ராதய: க்ருதா:।

என்று காணப்படுகிறது. இதன்பொருள், மயா என்னால், பூர்வசாஸ்த்ராநுஸாரேண-பழையசாஸ்திரங்களையநுசரித்து; வஜ்ராதய:-இவ் வஜ்ரயோகமுதலியன; க்ருதா:-செய்யப்படுகின்றன (சொல்லப்படுகின்றன) என்பதாம். ஆகையால் வராஹமிஹிரருக்கு முற்பட்ட ஜோதிஷசாஸ்திரிகள் இப்படியிருத்தல்கூடுமென்று அதற்குப் பலன்களும் யோகங்களும்கூட வகுத்துப்போயினர் என்று தெரிகிறது. இதற்குப் பட்டோத்பலர், பூர்வசாஸ்த்ராநுஸாரேணேதி:— பூர்வசாஸ்த்ராநுஸாரேண-பூர்வாசார்யை: மய யவ

னாதிபி: வஜ்ராத்யா யோகா: க்ருதா: என்று உரைகூறியிருக்கிறார். இதனுற்போந்தபொருளாவது;-பூர்வாசாரியர்களாகிய மயனுர், யவனர் முதலியவர்களாற்சொல்லப்பட்ட வஜ்ரயோகத்தை நான் குறித்தேன் என்பதாம். இக்காலத்துச்சோதிடவல்லுநர்களைப்போன்று அக்காலத்துச் சோதிடவல்லுநரும் இவ்வாறு ஐயமுற்றனரென்றாலும் அதற்கு முன்னரே இப்படிப்பட்ட யோகங்கள் பல இருந்தனவென்பதை வாராஹ மிஹிரரே கூறுகின்றனர் அவையாவன:—

பிருகத்ஜாதகம் நாபஸயோகாத்யாயம் ஸ்லோகம் 5–6.

ஶகடாண்டஜவச்சதுஷ்டயஸ்தைர் வஜ்ரம் தத்விபரீதகைர்யவ: ।
கமலம் து விமிஶ்ரஸம்ஸ்திதைஸ்தைர் வாபீ தத்யதி கேந்த்ரபாஹ்யகா: ॥
ஶுந்ஸத்யோஸ்ஸாம்யாஸ்து தாஶ்ச ஶுபயோஸ்வாபா பவந்தி ।
நாந்ருத்ர கேந்த்ரஸ்தா வஜ்ராக்யோ யோகோ பவதி ॥ என்பனவாம்.

அதாவது லக்னத்திலும் உதயத்திலும், ஏழிலும் சுபர்கள் நிற்க நாலிலும் பத்திலும் பாபிகள் இருப்பார்களானுல் அதற்கு வஜ்ரயோகமென்றும், அதற்கு மாறுபாடாகக்காணப்படுமாயின் அது யவயோகமென்றும், கேந்திரங்களில் எல்லாக்கோள்களும் காணப்படுமாயின் அதற்குக் கமலயோகமென்றும், 3, 6, 9, 12ல் எல்லாக்கோள்களும் நிற்குமாயின் அதற்கு வாபி என்றும் பெயர் என்பதாம். இன்னும்,

பிருகத்ஜாதகம் ராஜயோகாத்யாயம் ஸ்லோகம் 20.

குருஸிதபுதலக்னே ஸப்தமஸ்தேऽர்கபுத்ரே
வியதி திவஸநாதே போகினாம் ஜன்மவித்யாத் ।
ஶுபபலயுதகேந்த்ரை: க்ரூரபஸ்தைஶ்ச பாபைர்
வ்ரஜதி ஶபரதஸ்யுஸ்வாமிதாமர்த்தவாம்ஶ்ச ॥

என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதன்பொருள்:—குரு, சுக்ரன், புதன் இவர்கள் உதயத்தில் நிற்க, சனி ஏழில் நிற்க, திவசநாதன் என்ற சூரியன் பத்தில் நிற்கப் பிறந்தவன் எல்லாப் போகபோக்கியங்களையும் அனுபவிப்பன்; பலமுடைய சுபக்கோள்கள் கேந்திரத்தினிற்கப் பாபர்கள்பாபஸ்தானங்களையடையின், அந்தயோகத்திற்பிறந்தான் ஜனபதியும், வேடர் கள்வர் இவர்களுக்குத் தலைவனுமாவான் என்பதாம்.

இவைகளால் வராகமிஹிரர் சூரியனுக்குநான்காவதுராசியிற் புத சுக்கிரர்கள் இருத்தல் கூடுமோ என்ற வினவை எழுப்பிப் பூர்வாசாரியர் கள்கூற்றேன விடைபகர்ந்துளார். பூர்வாசாரியர்களாவார், மயனர், யவனர், (மாமஹீஃ) கார்க்கர் முதலாயினர். கார்க்கர்காலம் வேதாங்கஜோதிஷ காலம், (அதாவது இற்றைக்குச் சுமார் ஐயாயிரவருடங்கட்குமுன்னராம்.) இன்னும், இப்பிருகத்ஜாதகத்துக்கு உரையிட்டியபட்டோத்பலர், நக்ஷத்ரவிஷயெ ஜாதுசிதெவா வ்யாஹாரயந்ராத்ரயொஃ மயூயஸூ கெளஸவதஃ குஜித்ருஸ்யாஹஸ்வ ஸுயந்ராத்ருஸ்வாதயொ ரைவயாஷூஃயொவா நஸவதி ॥ ஒருபோதும் சூரியனுக்குவெகுதூரத்திற் புதசுக்ரர்கள் காணப்படுதலில்லையென்றும், அப்படியானல் நண்பகல் நள்ளிரவு இவைகளிற் புத சுக்ரர்கள் காணப்படுதல்வேண்டும், அது கூடாது என்றும் எழுதுகின்றனர். இதைத்தான் பண்டித சாஸ்திரிகள் பெயர்த்து அப்படியே எழுதினர்போலும். பூர்வாசாரியர்கள் ஒருகாலும் தோன்றக்கூடாத (உண்டாகக்கூடாத) ஒருவிஷயத்திற்குப் பலன்கூற மாட்டார்களென்பதை நன்முக நினைக்கவேண்டும்.

இதுகாறுங்கூறிய பிருகத்ஜாதகமேற்கோள்களினலேயே அந்நூலுடையார் முன்னைநாட்பழக்கத்தை ஒப்புக்கொள்வதைத்தவிர்த்து வேறுவழியில்லையென்றுகண்டனர் என்பதும், முன்னளில் இவைகள் சம்பவித்தனவென்பதும் விளங்குவதால் பரிபாடலிற்கண்ட கோணிலே சரியானதென்பதும், அதில் யாதொருபிழையுமில்லையென்பதும் ஒருதலை.

இனி அதனை இக்காலத்து ஆசிரியர்களும் ஜோதிடசாஸ்திரிகளும் ஒப்புக்கொண்டார்களில்லையென்பீர்களாயின், இக்காலத்திலே திரிக்சித்தாந்தகணிதத்தை அப்பியசித்துத் தென்னட்டாருக்குப் பஞ்சாங்க ரூபமாக முதன்முதல் வெளியிட்டவரும், இப்பொழுது திரிக்சித்தாந்த கணிதப்படி பஞ்சாங்கம் பதிப்பித்துவரும் ஸ்ரீமத் T. S. விசுவநாத சிரௌதிகாது பெற்றேருமாகிய ஸ்ரீமத். சுந்தரேசசிரௌதிகள் இவ்வாறுண்டாதல்கூடுமென்றுசொல்லியதாக ஸ்ரீமத் K. சிதம்பரையரவர்கள் ஓரிடத்திற் கூறியுள்ளார்கள். ஆகையால் நுணுகி யாராய்வோமாயின் இப்பரிபாடலிற்கண்ட கோணிலைகள் ஒருகாலத்துத் தோன்றியதே யொழியக் கவி தானுகக்கூறினர் என்றுகூறுதற் கியலாதாம்.

இனி, ஸ்ரீமான். R. S. நாராயணசாமி ஐயரவர்கள், தாம் குறித்த காலநிர்ணயத்தில் (செந்தமிழ்த்தொகுதி 19. பக்கம் ௩௱௭௯) தற்கால ஆங்கிலசித்தாந்தப்படி சுக்கிரனும் புதனும் முறையே 48–28 பாகைகளுக்கு மேலே எட்டுவதில்லையென்றும் அதனாலே இப்பாடலின் நாள் ஆடிமீ 18உக்குட்பட்டுத்தான் இருக்கவேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறுகிறார்கள். சிதம்பரையவர்கள், சுக்கிரன் 48 பாகையும், புதன் 29 பாகையும்தான் அதிகமாகச் செல்லக்கூடுமென்கிறார்கள். இவ்விதமாக அபிப்பிராயபேதங்கள் இருப்பதையும் மனத்தில் நிறுத்தவேண்டும். நமது உரையாசிரியரோ “பாம்பு மதியமறைய ஒல்லைவருநாளென்றது அவ்வாவணிமாதத்து மதிநிறைநாளாகிய அவிட்டத்தை; எனவே, மதியும் இராகுவும் மகரத்துநிற்க என்பதூஉம், கேது அதற்கு ஏழாமிடமாகிய கற்கடகத்துநிற்க என்பதூஉம் பெறப்பட்டன. இதனாற் சொல்லியது ஆவணித்திங்கள் அவிட்டநாளில் இக்கோள்கள் தமக்குரிய நிலமாகிய இவ்விராசிகளில் நிற்பச் சோமனை அரவுதீண்டவென்பதாயிற்று”. தற்காலத்தில், திருவாளர் நாராயணசாமி ஐயரவர்கள் எவ்வளவு அழுத்தமாக ஆடிமீ 18உக்குமேல் இருக்கமுடியாதென்று சொல்லுகிறார்களோ அவ்வளவு திடமாக ஆசிரியர் பரிமேலழகரும் ஆவணித்திங்கள் என்றே சொல்லுகின்றனர். அன்றிச் சாந்திரமானப்படி ஆடிமாதத்து அமாதினத்துக்குப் பிந்திய முதற்பிறைமுதல் ஆவணிமாதத்து அமாமுடிய ஆவணித்திங்கட்பகுதியான சிராவணசுத்தமெனக் கொள்வோமாயின், அச் சாந்திரமானக்கணக்குத் தென்னாட்டில் வழக்கிலில்லாததோன்றும். அன்றியும், சிராவணசுத்தமாக இருக்குமாயின் அவ்விதமே ஆசிரியர் குறித்திருப்பர். டாக்டர் திபோ (Dr. Thibaut) “தக்காணத்தில் தமிழ்ப்பாஷைவழங்குமிடத்திற் சௌர அல்லது வாக்கியசித்தாந்தமே உபயோகப்படுத்தப்படுகின்றதென உவாரன் ஆசிரியர் கூறியுள்ளாரென்றும், அது பிழையற்றதென்றும் குறித்துள்ளார். மேலும், வேதாங்கஜோதிஷத்திற்கண்ட சாந்திரமானகணிதம் பிழைபட்டதெனத் திவான்பஹதூர் ஸ்ரீமான். சாமிக்கண்ணுப்பிள்ளையவர்களது 1916-ஆம்வருடத்துச் சர்வகலாசங்க ஜோதிஷச்சொற்பொழிவுகளை ஊன்றிநோக்கப் புலனாம். தென்னாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவந்தது புலீசனால் இயற்றப்பட்ட வாக்கிய கணனமுறை என்று தென்னாட்டாரும் ஜோதிடமும் என்பதில் முன்னரே குறித்துள்ளேன்.

மேலேகாட்டிய நியாயங்களால் ஆடித்திங்கள் நான் என வற்புறுத்துவது ஆசிரியர் கூற்றுக்கும் உரையாசிரியருரைக்கும் மாறுகொளக் கூறலாகும்.

இன்னும், வேதாங்கஜோதிஷகாலத்து (அதாவது சற்றேறக்குறைய இரண்டாயிரம்வருடங்கட்குமுன்) ஆகர்ஷணசக்தியால் அயனமும் விஷுவத்தும் சலனமடைந்திருந்தது. இதனைத் திருவாளர் ராம. கணபதி ஐயரவர்கள் எழுதியுள்ளார்கள். வாக்கியகணனத்திலே தக்ஷிணாயனம் ஆயில்யத்தின்மத்தியிலிருந்து முன்னர் உண்டாயிற்று; இப்பொழுதோ புனர்வசுவிலிருக்கிறதென்று காணப்படுகிறது. காலஞ்சென்ற திலகமகரிஷி தமது ஓரியன் (Orion) என்னும் நூலில் வேறுவிதமாகக் கூறுவர். பின்னர் அசுவதியிலிருந்துவர அதைக்கொண்டே கணித்துவரப்பட்டதென்றும், இப்பொழுது உத்திரட்டாதிக்குச் சமீபத்திலிருக்கிறதென்றும் திருவாளர் கணபதி ஐயரவர்கள் கூறுவர் (செந்-பக்கம் 374-376). பாஸ்கராசாரியர் தமது வாஸனாபாஷ்யத்திலும் கோளாத்யாயத்திலும் அயனசலனம் ஒருவிதமாகக் கூறுகின்றாரில்லை யென்றும் பலவிதமாக மாறி, இருந்தஇடத்தையே யடைகிறதென்று கொள்ள வேண்டுமென்றும், தற்போது ஆங்கில ஜோதிஸ்தந்திரசபையின் உப. அக்கிராசனாதிபதியாயிருக்கும் (Vice President, Royal Astrological Society of England) வை, வே, இரமணசாஸ்திரிகள் 'இந்து' பத்திரிகைவாயிலாகச் சிலவருடங்கட்குமுன்னர் எழுதியுள்ளார்கள். இவற்றையெல்லாம் உணர்ந்தும், அறிந்தும் காலநிர்ணயம்செய்ய வேண்டும்.

இனித் திருவாளர் நாராயணசாமி ஐயரவர்கள் குறித்த உத்தேச காலத்தை யாராய்வோமாயின், கி. பி. 372க்குக் கலியப்தம் 3473க்கு ஷஅப்தம் ஆரம்பதினத்தில் சூரியன் மேஷத்தில் 59 நாழிகை 28 விநாடி 45 தற்பரைக்குப் பிரவேசித்திருக்கின்றான். ஆடிமாதப்பிறப்பு முதனாள் (இரவு) 55 நாழிகை 50 விநாடி 45 தற்பரைக்கு உண்டாயிருக்கிறது. அதன்படி கணிக்கச் சூரியமத்திமம் 3 ராசி 14 பாகை 20 கலை 13 விகலையும், சூரியசுத்தஸ்புடம் 3 ராசி 13 பாகை 23 கலையும் (அதாவது 104) பாகை) ஆகிறது.

புத சுக்கிரர்களுக்கோ புதனது சூரிய சுத்தஸ்புடம் 106 பாகை 28 கலையும்; சுக்கிரனது சுத்தஸ்புடம் 118 பாகை 56 கலையு மாகிறது.

புத சுக்கிரர்கள் நித்தியகதியோ முறையே 4 பாகை 5 கலேயும் 1 பாகை 36 கலேயும் ஆம். அங்ஙனமாக நாராயணசாமி ஐயாவர்கள் கொள்கை பிறழ்ச்சியுடையதாகின்றது. இவர்கள் தம் ஆராய்ச்சியிற் பஞ்சசித்தாந்திகாவிற்கூறிய சூரியசித்தாந்தகணனத்தைக் கவனித்திருப்பதாகத் தெரிகிறது. பஞ்சசித்தாந்திகை பதினாறாவது அத்யாயம் முதற் சுலோகம்,

ஸஷ்டிஸ்ஸாஷ்டேஷுவஞ்யாம்தாராக்ரஹநிணஷ்யேகஷ்லிஷாஜே।
தஜ்ஜ்ஞஸிதௌ ஸூர்ய ஸம்ஸ்ப்ருஷ்டமதேளஜ்ஜ்யிநீஷுக்ஷண ॥

என்பதாம். அதற்குச் சுதாகரதுவிவேதியவர்கள், "புத சுக்ரர்களுக்கு அவந்தியிலே (உஜ்ஜியினியிலே) மத்திமஸ்புடஞ்செய்ய சூரியமத்திமஸ்புடம்போற் கதிகளாம்" என்பர். இதனல், சூரியனுடைய நித்தியகதிதான் இந்தப் புத சுக்ரர்களுக்கும் என்று கொள்ளக்கூடாது. மத்தியஸ்புடம் வேறு. சுத்தஸ்புடம் வேறு. பழைய செந்தமிழ்த்தொகுதிகளைப் பார்த்தாற் சோதிடகணிதம் குறிக்கப்பட்டிருப்பது நன்கு புலனும். அதன்படி கலிசுத்ததினத்தைப் பல்வேறுவகைப்பட்ட கணிதங்களைச் செய்து ஒவ்வொருகிரகமும் இத்தனை பரிவர்த்திகளைச் செய்திருக்கின்றது என்பதை நீக்கிவிட்டு மிகுதிக்கு ராசி பாகை கலைகளைக் காணவேண்டும். அவ்விதமான கணிதமே செய்யப்பட்டு மேலேயுள்ள புத சுக்ர ராசி பாகை கலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் நாராயணசாமி ஐயாவர்கள் உத்தேசித்த கி. பி. 382 பொருத்தமில்லை. வேறுவருட மிருக்கலாமென்றாலும், அவர்கள் ஆடிமீ 15உ தான் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவதும் பொருந்துமாறில்லை என்புதை ஆசிரியர் பரிமேலழகர் உரைகொண்டு காட்டுவாம்.

இனி, ஆசிரியர் பரிமேலழகர் கூற்றுப்படி "ஆவணித்திங்களிலே, ஆதித்தன் சீயத்தையடைய" (பரி - பக். 85) வென்று கூறுவதால் அன்று பிரவேசமாயிருந்தாலு மிருக்கலாம். அவ்விதமானல் ஆதித்தன் சிம்மத்தில் முதற்பாகையில் இருக்கவேண்டும். ஐயாவர்கள்கூற்றுப்படி புதன் 29 பாகைக்குமேல் எட்டியிருக்கமுடியாதாகையால் (121–29) —92 பாகையில் இருக்கவேண்டும். அப்பொழுது கடகத்தில் வரவேண்டியதுதானேயென்பர். உண்மைதான். முன்னரே அயனசலனமும், விஷுவத்சலனமும் கண்டு மற்றவைகளைக் கவனிக்கவேண்டு

மென்று கூறியுள்ளேன். திருவாளர் நாராயணஸ்வாமி ஐயரவர்களும் வராஹமிஹிரர்காலம்வரையிற் கார்த்திகாதிகணனமே வழங்கிவந்த தென்பர் (செந்தமிழ்த் தொகுதி–19. பக். 382). இது உண்மைதான். அப்படியாயின் விஷுவத்தோ, அயனமோ கார்த்திகையினின்றல்லவா ஆரம்பித்திருக்கவேண்டும். இது அதற்குமுன் புனர்பூசத்திலும், அதற்குமுன்னர் ஆயில்யத்திலுமல்லவா ஆரம்பித்துவந்தது. ஆகையால் கார்த்திகையில் மேஷாயனம் இருந்திருக்குமாயின் நக்ஷத்திரம் ஒன்றுக்குப் பாதம் நான்காக அசுவதி, பரணி இரண்டு நக்ஷத்திரத்திற்கு 8 பாதத்திற்குப் பாதம் 1-க்கு 3 பாகை 20 கலையாகக் கூடியது 26 பாகை 40 கலை குறையுமானால் அதது ஆசிரியர் கூறியவாறே இருக்குமென்பதில் ஐயமில்லையாம். இப்பொழுது புதனுக்குக் கண்ட 92 பாகையில் $26^{0}$ – $40^{1}$ ஐக் கழித்தால் மீதமாவது 65 பாகை 20 கலையாகும் ஆகவே மேடம், இடபம் போக மிதுனராசியில் 5 பாகை 20 கலை புதன் சென்றிருப்பான். அதேமாதிரி சுக்கிரனுக்குச்செய்ய (121—48 + 26·40) 46 –20 கலையாகும். அதாவது ரிஷபத்தில் 16 பாகை 20 கலை சென்றிருப்பான். ஆகவே சூரியன் சிம்மத்திலும், புதன் மிதுனத்திலும், சுக்கிரன் ரிஷபத்திலும் இருப்பது உண்மையென்றேற்படும்.

இதுவரையிற் சொல்லியதுகொண்டு மற்றைக்கொள்கைகளை (அங்கி என்பது அக்கினிநக்ஷத்திரம் என்பதும், புரைவரை என்பது அஸ்தகிரி என்பதும் போன்றவைகளை)க் கவனிக்கவேண்டிய அவசியமே வற்படாது. எப்பொழுதும் பழமையானகொள்கைகள் ஒரு ஆதாரத்தைப்பற்றியிருக்கும்.

இனி, இக்காலம் எப்பொழுதுதான் இருக்கும் என்பதைப்பற்றிப் பின்னொருமுறை ஆராய்வாம்.

---

இலக்கணவிளக்கம்
வைத்தியநாததேசிகர் பரம்பரை,
திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

# பல்லவர் கோயில்கள்.

(கடுo-ஆம்பக்கத் தொடர்ச்சி.)

## ii. தமிழ்நாட்டுப் பழையகோயில்கள்.

நாம் இதிற் பல்லவர்காலத்திற் கட்டப்பட்ட கோயில்களை ஆராய்வதாக எடுத்துக்கொண்டோம். பல்லவரது சரித்திரமே நமக்குக் கி. பி. ஆறும் நூற்றாண்டின்மத்தியிலிருந்து (அதாவது சுமார் 550 முதல்) தான் சரியாகத் தெரியும். அதேபோலச் சிற்பவடிவுசாத்திரத்தைக் கொண்டு ஆராயும்போதும் அதற்கு முந்தியகாலத்துக் கோயில்களுள் ஒன்றாவது இத் தமிழ்நாட்டிற் கிடைக்கவில்லை. நமக்குக் கிடைக்கும் கோயில்களுள்ளும் மிகப்பழமையானது மலையிற் குடையப்பட்ட குடைவரைக் கோயில்களே. (Rock-cut Temples). "அஃதெங்ஙனம்? கி. பி. ஆறும் நூற்றாண்டின்மத்தியில்தான் தமிழ்நாட்டினர்களுக்குக் கோயில்கட்டும் ஆசையுண்டாயிற்று? கோயில்கள் கட்டத்தெரியாமையால், பாறைகளிற் செதுக்கிவந்தார்களா?" என்ற விஷயங்களை அறிய வேண்டுவது முக்கியமாகின்றது.

ஆனால், கி. பி. இரண்டாம்நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டிற் கோயில்கள் கட்டப்பட்டுவந்திருக்கின்றனவென்பதை நாம் மதுரையிலிருந்த கடைச்சங்கமருவியநூல்களால் அறிகின்றோம். சேரநாட்டுக்கருவூரைத் தலைநகராக்கொண்டு செங்கோல்நடாத்திய செங்குட்டுவன் கண்ணகிக்காக இமயமலைசென்று கற்கொணர்ந்து படிவமமைத்துக் கோயில்கட்டினானென்பதும் இந்நாட்டிற் குடியேறியிருந்த யவனர்கள் அரபிக்கடலையொட்டி மலையாளதேசத்தில், ரோம்தேசத்தை யாண்டுவந்த அகஸ்டஸ் என்பானுக்குக் கோயில் கட்டியிருந்தார்களென்பதும் யா மறிந்தனவே.

கி. மு. மூன்றும்நூற்றாண்டில் இமயம்முதற் பெண்ணைவரையாண்ட மௌரியவம்சத்துச் சாசன எழுத்துக்களையொத்த ப்ராக்ருதபாஷையிற் பிராமி (Boarmi) எழுத்துக்களில் எழுதப்பட்ட சாஸனங்களையுடைய குகையறைகள் மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களிலும், செஞ்சிமலைக்குச்சமீபத்திலும் யதேஷ்டமாகக் கிடைக்கின்றன. அவைகள் பௌத்த

ஜைனமுனிவர்களால் உபயோகப்படுத்தப்பட்டுவந்தன. அவைகளுக்குப் "பஞ்சபாண்டவர் படுக்கை" எனப் பெயர் உண்டு. அவைகளுள் முக்கியமானவை திருக்கோயிலூருக்குத் தென்கிழக்காகப் பன்னிரண்டுமைல் தூரத்திலுள்ள "திருநிறன்கோன்றை" என்னுமூரிலுள்ள அப்பந்தநந்தது ஜைனக்கோயிலுள்ள அறைகளே.

யாவரும் புகழ்ந்துகொண்டாடும்படி சளைப்பில்லாமல்வேலைசெய்த திருவாங்கூர்ச் சிலாசாஸனபரிசோதகர் மகா-ள-ள-ஸ்ரீ T. A. கோபிநாதராவ் அவர்கள் காஞ்சீபுரம் காமாக்ஷியம்மன்கோயில் உட்பிராகாரத்திற் சுமார் கி. பி. இரண்டு அல்லது மூன்றும்நூற்றாண்டைச்சார்ந்த புத்தவிக்கிரகங்களுட் * சிலவற்றைக் கண்டுபிடித்திருக்கிறார்.

அன்றியும், சங்கநூல்களுள், பலராமன் கண்ணன், காளி, இந்திரன் முதலியோர்களுக்குக் கோயில்கள் கட்டப்பட்டுவந்தனவெனக் கூறப்பட்டிருப்பதாலும், கோபிநாதராவ் அவர்களாற் குடிமல்லத்துக் கண்டுபிடிக்கப்பட்ட கிறிஸ்தவாப்தத்திற்கு முந்தியதான லிங்கம் † முதலியவைகளாலும் அக்காலத்து ஜைன புத்த மதத்தினர்க்கேயன்றி இந்து மதத்தினர்க்கும் கோயில்களிருந்தனவென்பது நன்குபெறப்படும்.

ஆகவே, தமிழ்நாடுமுழுவதும் நிறைந்திருந்த அழகானகோயில்களுள், தற்காலத்து ஒன்றுகூடக் காணப்பெறாமையும், திடீரென்று கி. பி. ஆறும்நூற்றாண்டின்மத்தியிற் குடைவரைக்கோயில்கள் தமிழுலகத்துலவப்பெற்றமையும் எங்ஙனம்?

இதற்குவிடை விழுப்புரம்தாலூகா மண்டகப்பட்டிலுள்ள ஒரு பழைய சாஸனத்திலிருக்கின்றது. அது ஒன்றுக்குமுதவாதபடி ஜீர்ணமாய்விட்டதென்று சென்னை இராஜாங்கச் சிலாசாஸனபரிசோதகர்களால், ‡ அறிவிக்கப்பட்டது. ஆனால் நான் அதை முழுதும் நம்பாமல்

---

* Ins. Ant. Vol. XLIV Part DLVII June 1915.

† Elements of Hindu Iconography by T. A. Gopinatha Rao Vol. II Part I plates 2, 3, 4 and 5.

‡ G. O. No. 518. Public 18th July 1905 Report on epigraphy for 1904—1905. Part II No. 3. P. 39.

அங்குச்சென்று அதன் "பதிவுபடம்" (Estampage) ஒன்று எடுத்து வாசித்ததில் அதன் இரண்டாம் அடியின்முடிவில் "விசித்திரசித்தேன" என்னும் பெயரை என்னால் வாசிக்கமுடிந்தது. "விசித்திரசித்த" வென்பது நான் பல்லவரத்திற்கண்டு* பிடித்த முதலாம் மஹேந்திரவர்மனது விருதாகும். ஆகையால் விசித்திரசித்தனாற் பாறையிற் செதுக்கப்பட்ட மண்டகப்பட்டுக் குகையானது நிச்சயமாக மஹேந்திரவர்மன்காலத்தைச் சார்ந்தது என்று துணியலாம்.

ஆயினும், அச்சாஸனம் முழுவதையும் என்னால் வாசிக்க முடியவில்லையாதலால் அதன் பதிவுபடத்தைக் கோபிநாதராவ் அவர்களுக்கு அனுப்பி அதைப் பெயர்த்தெழுதும்படி வேண்டிக்கொண்டேன். அதைப் பெயர்த்தெழுதியபிறகு மகா-ா-ா ஸ்ரீ ராயரவர்கள் "என் மனதிற்குத்திருப்தியாக இச்சாஸனத்தை வாசிப்பதில் ஜயமடைந்தேன் என்பதைத் தங்கட்குச் சந்தோஷத்துடன் அறிவிக்கின்றேன். மஹேந்திரவர்மனது மற்றைச்சாஸனங்களைவிட இது மிகுந்தபிரயோசனத்தைக் கொடுக்குமெனவு மறிகின்றேன்" என எழுதினார்கள்.

என்னுடைய வேண்டுகோளின்படி கோபிநாதராவ் அவர்கள் அச்சாஸனத்தைப்பற்றி ஒரு சிறு வியாஸமெழுதி அதைப் பதிவுபடத்துடன் "எபிகிராபியா இந்திகா" என்னும் பத்திரிகைக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதன் பெருமையெல்லாம் அதற்கே சேரவேண்டுமென்னும் விருப்பம் எனக்கிருப்பதால் "பதிவுபட"த்தை நான் இங்குக் கொடுக்கவில்லை.

சாஸனம் நமக்கு முக்கியமானதால் அவருடைய உத்தரவின்பேரில் அவர் பெயர்த்தெழுதியபடி சாஸனத்தையும் மொழிபெயர்ப்பையும் கீழே வரைந்திருக்கின்றேன்.

சாஸனம்:—

"ஏதத³நிஷ்டகமத்³ருமமலோஹமஸுத⁴ம் விசித்ரசித்தேந நிர்மாபிதம் ந்ருபேண ப்³ரஹ்மேஶ்வரவிஷ்ணுலக்ஷிதாயதநம்"

---

* பின்னால் படம் IV.

மொழிபெயர்ப்பு:—

"பிரும்மா ஈச்வரன் விஷ்ணு ஆகிய இவர்களுக்கிருப்பிடமாகிய (இவர்களது விக்கிரகங்களமைக்கப்பட்ட) இக்கோயிலானது கல்லில்லாமலும் மரமில்லாமலும் உலோகமில்லாமலும் சுண்ணாம்பில்லாமலும் விசித்திரசன் என்னும் அரசனாற் செய்விக்கப்பட்டது."

இச்சாஸனம் வெகு சிறியதாயிருந்தாலும் பலபொருள்களையுடைத்தாயிருக்கின்றது. மஹேந்திரவர்மன் இச்சாஸனத்தால் இப்பொழுது இங்கே (தமிழ்நாட்டில்) கல் சுண்ணாம்பு உலோகம் மரம் முதலியவைகளை யுபயோகித்துக் கோயில்கள் கட்டிக்கொண்டு வருகிறார்கள்; ஆனால், விசித்திரசித்தன் (விசித்திரமான சித்தத்தையுடையவன்) என்னும் பெயரைத் தரிக்கத்தகுந்தவனான நான் ஒரு பாறையைத் தவிர மற்றவைகளி னுதவியில்லாமற் கோயில்கட்டும்விதத்தைத் தமிழ்நாட்டிலுள்ள எனது பிரஜைகளுக்குக் கற்றுக்கொடுக்கப் போகின்றேன்" எனக் கூறுகின்றான்.

மஹேந்திரன்காலத்தில்தான் தமிழர்களுக்குப் பாறைகளிற் குகைகள் செதுக்கும்வழி தோன்றியது எனச் சிலர் எண்ணலாம். ஆனால் "அது அப்படியில்லை. அரசனுடைய நேர்பார்வையின்பேரில்தான் பரவிய"தென்பதை இச்சாஸனம் தெளிவாகக் காண்பிக்கின்றது. மண்டகப்பட்டுக்குகை அரசனுடைய சொந்த உத்தரவினாலேயேதான் செதுக்கப்பட்டது. ஆகையால் மஹேந்திரவர்மன்,

1. பாறைகளிற் கோயில்கள் செதுக்கும் வழக்கம் விசித்திரமும் புதுமையுமானதென்றும்,

2. அப்படிச் செதுக்குமெண்ணத்தை இந்நாட்டிலெழுப்பியதுந் தானே (சிற்பவேலைக்காரர்களல்லர்) என்றும் கூறிப் பாத்தியதையை ஸ்தாபித்துக் கொள்ளுகிறான்.

இச்சாஸனத்திற் குடைவரைக்கோயில்கள் செதுக்கும் வழக்கம் புதிதானது என்றும், விசித்திரமானதென்றும் கூறப்பட்டிருக்கின்றது. அதற்குமுன் இப்படிப்பட்ட குடைவரைக்கோயில்களிருந்திருக்குமாயின் இதிற்கூறியதற்குப் பொருள் ஒன்றுமில்லை. ஆகையால், தென்னிந்தியாவிலுள்ள குடைவரைக்கோயில்கள் எல்லாவற்றிலும் மண்டகப்பட்டிலுள்ளது மிகவும் பழமையானதென்று நிச்சயமாய்றியலாம்.

மஹேந்திரன்காலத்திலேயே பாறைகளிற் செதுக்கப்படாமற் கல், சுண்ணும்பு, உலோகம், மரம் முதலிய அழியக்கூடிய சாமான்காளாற் கட்டப்பட்ட கோயில்களும் இருந்தனவென்று இச்சாஸனம் நன்ருகக் கூறுகின்றது. அவைகள் அழியக்கூடிய சாமான்களாற் கட்டப்பட்டிருந்தமையாற் காலக்கிரமத்திலாவது மனிதர்களாலாவது அழிந்திருக்க வேண்டும்.

(தொடரும்.)

தி. நா. சுப்பிரமணியம்,
கும்பகோணம்.

---

# புரூரவசரிதை.

[கசகூ-ஆம் பக்கத்தொடர்ச்சி].

## உருப்பசிநீங்குபடலம்.

அறம்பொருளின்பம்வீடென்றறைந்தநாற்பயனின்முன்னைத்
திறந்தருமறமேயாதிமூன்றையுஞ்சிந்தையாா
விறஞ்சியன்புடனேபூசையியற்றுவானியற்றுநாளில்
மறஞ்செலாவறத்தினன்பாற்பூசனேவழங்கலானுன். (க)

அம்முறைநடத்துநாளிலருத்தமுங்காமந்தானும்
விம்மிதமாகிநம்மையிகழ்ந்தனனறத்தின்மிக்கா
னம்வலிசிறிதுகாட்டாதொழிகுதனன்றன்றென்னத்
தும்முறுசீற்றங்கொள்ளப்பொருளிவைசொல்விற்றன்றே. (உ)

உரவுநீருலகங்காப்போர்க்குறுபொருளாதியாகி
யரியமாமகங்களாலேயமரருக்குதவியாங்குப்
பெரியவானவர்க்குமேலாய்பெரும்பதமுதவிபிங்ஙன்
பொருளலார்தமைபுமாக்கும்பொருளலாற்பொருள்வேறுண்டோ. (ங)

தருமமென்றுரைத்தல்யார்க்குந்தருதலோதவிர்தலோவென்
றருமைகண்டறிந்திலாய்நானல்லவோவறத்தின்மூலந்
தெரிவுறவுணர்ந்துமெண்ணுதிகழ்ந்தனையதனுற்றிய
குரவிலுக்காளாய்லோபங்கொள்கெனச்சபித்ததன்றே. (ச)

மற்றையக்காமந்தானுமண்ணுளோர்விண்ணோாதி
பெற்றபேரின்பமெல்லாம்யான்செயும்பெற்றியன்றே

வுற்றுணர்ந்தறியினெல்லாவுள்ளமுமுறைந்தவென்னைப்
பற்றிலாகில்வேதன்முயற்சியுன்பயத்தவாமோ. (ரு)

இலங்குவேலரசவென்றுதிகழ்ந்தனையாதலாலே
நலங்கிளரின்பங்குன்றியாசையானலிந்துநாமப்
பொலன்குழைக்கருங்கட்செவ்வாயுருப்பசிபோகம்போக்கிக்
கலங்குதிநெஞ்சமென்னவுரைத்ததுகடியசாபம். (சு)

கடைப்பிடிநலமேநல்குந்தருமமாங்கடவுட்டெய்வம்
விடைத்தவச்சாபந்தாங்கும்விடலையைவியந்துநோக்கிப்
படைத்தநின்வாளுளூழிகாண்கநின்குலத்தோர்பானு
நடக்குறுங்காலங்காறும்வாழ்கெனநல்கிற்றன்றே. (எ)

தருமனன்குரைத்ததென்றும்மற்றவைசபித்தவென்று
மருணயந்தவனுமல்லனவலமுற்றவனுமல்லன்
வருவவந்துறுமென்றுள்ளத்தெண்ணியேவையமெல்லா
மொருதனிச்செங்கோலோச்சியுருப்பசியோடும்வாணாள். (அ)

வேறு.

அந்தமாதனத்தொடுவிளையாடுவான்வசந்தம்
வந்தமாதனன்காண்கலும்பூகதம்வகுளஞ்
சந்தமாதனமெனவிளந்தளிர்தருஞ்சாரற்
கந்தமாதனப்பெருங்கிரிமருங்கினிற்கலந்தான். (கூ)

ஓங்கும்யோசனையோரிரண்டாயிரமுயர்ந்து
பாங்கிலன்னவையகன்றுமுப்பத்தொருநான்காய்
நீங்குமாயிரநீலத்தைநிடதத்தைநெருக்கும்
வீங்குமேருவின்மேல்புடைநூல்படவிளங்கும். (க0)

சிந்துரந்தொடும்பொருந்துறுமம்மலைச்சிகரஞ்
சிந்துரத்தொடும்பொருங்குறத்தியர்முலைச்சிகரஞ்
சிந்துரத்தொடும்பொலிந்தமெய்ச்சித்தியர்திலகஞ்
சிந்துரத்தொடும்பொலிந்தவணிலங்குறுந்திலகம். (கக)

முனிவருந்துறைநோக்கியசுரவர்தம்முன்றில்
முனிவருந்துறைவிளங்குறுமுகிழ்மதிக்குழவி
முனிவருந்துறைபிகழ்ந்துபோறிவொடுமூத்து
முனிவருந்துறையறிந்துமாதவத்தொழில்முடிப்பார். (கஉ)

ஆயசூழலினமைத்தனனெருமணிமாடம்
போயபேரிருளொருவழிப்புகுந்ததுபோலப்
பாய்கருங்கதிர்விளங்குவததனிடைப்பயின்றுன்
மாயையூடிருந்தியற்றுறுமொருவனேமான. (௧௩)

இன்னகோயிலுளுருப்பசியிளநலம்பருகி
நன்னர்நாள்பலகளித்தனன்களிடுத்திடுநாளிற்
பொன்னின்வார்கழற்புரூரவாபுயத்துமால்பூண்ட
மின்னேமீட்பதற்கெண்ணினன்விண்ணவர்வேந்தன். (௧௪)

அண்டர்வேந்தன்மற்றவ்வழியிருவரையழைத்துப்
பண்டைநாளுளதன்மைகளனைத்தையும்பகர்ந்து
விண்டபூங்குழலுருப்பசிவளர்த்திடும்வெள்ளை
கொண்டுபோதுகவெனவிடைகொண்டுபோயினரால். (௧௫)

போனவிஞ்சையர்கருணிமாளிகைப்புறத்துத்
தானவாரணமன்னனுமனையவடானும்
வேனிலான்சமர்க்கெதிர்வுழிவிண்ணவர்வேந்தன்
கானவார்குழற்குதவியவெள்ளையைக்கவர்ந்தார். (௧௬)

ஒருவகன்றிடவூடினுளுள்ளநன்குணர்ந்தான்
வெருவல்யான்றனிகொணர்குவன்கடிதெனவிரையத்
தெரிவைபின்செலமீடனுமிந்திரன்செயலாற்
கருவிவானின்றிமின்னினவிருள்புறங்காப்ப. (௧௭)

ஏற்றுபேரிருளகன்றுநற்பகலெனத்துலங்க
வெற்றிவேலிறைநின்றதுகண்டனள்விரிந்த
பொற்றபூந்துணரசோகினைப்பதமலர்ப்புறத்துப்
பற்றிலாதவர்சீவகாரம்மெனும்படிவம். (௧௮)

படிவம்நோக்கினள்காமமாந்தெய்வதம்பகர்ந்த
கொடிமைநோக்கினளிந்திரன்சூட்சியுங்குறித்தாள்
வடியுண்வென்றிவேல்மன்னவவென்னைமேணத்தற்
கொடிவுவந்தனவெனவுரைத்தும்பரினகன்றுள். (௧௯)

தையலவ்வழியேகிடத்தரிக்கிலனாகி
வெய்யதீயிடைமெழுகெனவுள்ளமும்வெதும்பி
யுய்யுமாறுசற்றுண்டுகொலெனவுணர்வொழிந்து
பொய்யிலாநெறிமன்னவன்றனித்தனன்புகல்வான். (௨௰)

வேறு

குன்றெறிந்ததிண்டோட்குலிசிகுழையூடு
சென்றெறிந்தவேற்கட்டிருவனையதெள்ளமுதை
நன்றறிந்துகோடியெனநல்கிநடுவேகவர்ந்தா
னின்றறிந்தேனென்னுயிர்க்கோர்தூண்டிலெனவிட்டீர்த்தல். (௨௧)

பாடுமிசையளிகள்செந்தேன்பருகுமலர்த்
தோடுவிரிகூந்தற்றொண்டைக்கனியிதழ்வாய்
வாடுநுசுப்பினிளமான்பிரிவினால்வளர்த்த
வாடுதனைமீட்டுமுலையானையைக்கைவிட்டேனே. (௨௨)

சந்தத்தனிமணியைத்தீர்ந்ததறுகட்செவிபோற்
கந்தக்குழலையிழந்துகருத்தழிவா
னுந்திக்கடலலைநீருண்டபுயலன்றியுமின்
றந்தப்புரத்திற்றடித்தெழுந்ததச்சோவே. (௨௩)

என்னப்பலபலவும்பன்னியிருந்தழியு
மன்னர்க்குமன்னன்மதித்தழற்கும்வாடைக்குங்
கன்னற்சிலைவேள்கணைக்குங்கடலொலிக்கு
நென்னற்பிழைத்தென்மேலென்றேநிகழ்வதென. (௨௪)

கண்ணாருததிகடைந்தெடுத்ததெள்ளமுதின்
விண்ணாளரசன்விருந்தாயருந்துமெழு
பண்ணார்ந்தசெவ்வாய்ப்பவளவிதழமுத
முண்ணாதொழியேனென்றேங்கும்வனத்தூடுற்றான். (௨௫)

மஞ்சுதவழும்வரையும்வரைச்சார்புங்
கஞ்சமலர்ந்ததடமுங்கடிகாவு
நஞ்சுகலந்தவிழிநன்னுதலாளைத்தேடி
நெஞ்சுகலங்கிநெடுநாட்டிரிந்தனனால். (௨௬)

போந்தவரசன்கலைமடந்தைபேர்பொருந்தி
வாய்ந்தநதியின்மருங்குற்றானம்மருங்கிற்
றேய்ந்தமருங்குற்சிலதியரோடுஞ்சிவந்த
காந்தள்பொருசெங்கையுநற்பசியைக்கண்ணுற்றான். (௨௭)

கண்டானகங்குளிர்ந்தான்கண்களித்தான்காதலமு
துண்டானெனத்தளிர்த்தானுன்மத்தன்போலானான்

வண்டாரலங்கல்மணிப்புயங்கள்பூரித்தான்
தண்டாமரையனையாட்கின்னமொழிசாற்றினான். (உஅ)

பொன்னேமணியேபுனைகலனேபொற்கோயின்
மின்னேயமுதேவிளக்காவிளக்கொளியே
பின்னேயமின்றிப்பிரிந்தனையேபோராசே
பென்னேயுனைப்பிரிந்துமின்னுயிர்கொண்டுய்வேனோ. (உகூ)

கோணுதலர்ந்தசெழுங்கோகனகவாண்முகமு
நாணுளும்வேட்டநலங்கனிந்ததோளிணையும்
பூணூர்களபப்புணர்முலையும்புன்னகையுங்
காணுதொழிந்தேனிக்கங்குல்கரைகாண்பேனோ. (௩0)

பஞ்சிற்கனல்போலப்பான்மதியும்வேள்பொருத
நெஞ்சிற்கனற்றிநிலைகவர்ந்துநீறுக்க
நஞ்சிற்கொடியாய்விழிக்கருணைநல்காதே
வஞ்சித்தகன்றுபிதுவோவுன்வாறேன்றான். (௩க)

செம்மலுரைத்தமொழிகேட்டலருஞ்சேதாம்ப
லம்மத்தளவமரும்பிற்றெனநகையா
மம்மரொளியாகமன்னவனேயென்னனைய
கொம்மைமுலைமின்னார்குணங்கூறக்கேட்டியால். (௩உ)

அள்ளீரிலைவேலலங்கற்களிறனையாய்
தெள்ளீரம்புனிற்றச்சிறந்தசெழுங்கிடைபோற்?
கள்ளீரநீங்காக்கருங்கூந்தற்கன்னியர்க்கு
முள்ளீரமின்மைசிறிதுமுணர்ந்திலையோ, (௩௩)

நிவந்தவரைகுளிரவீழ்ந்தநெடுநீரு
மூவந்தமலர்தேடியுறவுற்றவண்டினமுங்
குவிந்தமுலையார்களன்புங்குணமனைத்துங்
கவர்ந்துகொடுபோங்கருத்தன்றேகாவலனே. (௩ச)

கன்மூடுநெஞ்சுங்கனிமூடியமொழியுங்
குன்மூடுந்தூண்டிற்குலைவிழியுங்கொண்டுலவு
மின்மூடுங்காரோதிமெல்லியலாரென்னும்வெறும்
புன்மூடும்பாழ்ங்கிணற்றில்வீழ்வரோபோர்வேந்தே. (௩டு)

சூதாடல்கள்ளருந்தல்வேட்டைசிலசூழ்தல்
தீதாங்கொலைபுரிதல்செங்கோன்முறைதிறம்பல்
காதார்ந்தகண்ணார்தங்காமத்தேகாதலித்தல்
மீதானவேந்தர்கெடுதற்குவித்தாமால். (௩௬)

ஈதலறிவூக்கமின்சொற்பொறையுடைமை
பேதமறப்புரத்தல்வாய்மைபிறழாமை
யோதல்படைபயிற்றலொன்னாரடங்கக்
காதல்திறைகோடலீதன்றேமன்னர்கடன். (௩௭)

ஆதலாலென்பாலவாவொழிகவன்றாகி
லேதமறவோராண்டிடையொழிகவீங்கொழிந்தாற்
போதவடிவாயுனக்கோர்புத்திரனுண்டாமவனால்
மாதவஞ்செய்தென்னைமணத்தியெனமொழிந்தே. (௩௮)

பின்னாகவொன்றுபகர்வாள்பெருந்தகையே
பொன்னாட்டரசன்பொதுமடந்தையாளன்றே
வின்னாளிற்காந்துருவர்க்கீந்தானருந்தவத்தா
லன்னாரைவேண்டியருளிலணைகுவன்யான். (௩௯)

என்றினையபன்னவிகல்வேந்துருப்பசிதன்
குன்றனையவின்பக்குவிமுலையிற்கூட்டுதவ
நின்றுபுரிந்தான்முன்கந்துருவர்நேர்ந்துபசும்
பொன்றிகழுந்தீத்தகழியொன்றுதவிப்போயினார். (௪0)

காதார்விழிச்சிதருங்காமக்கடுங்கனலு
மூதாதைநின்றுமுறுக்குபெருங்கனலு
மேதாலவியுமெனநினைந்தேற்கித்தழலும்
போதாதோவென்றதனையிட்டகன்றுபோயினான். (௪௧)

தாறுபொருகம்பத்தறுகட்களிறனையா
னீறுபடுகாமநெருப்பினெடுநாளுழன்றே
யேறுபருவமுலையேந்திழையைக்கண்ணுற்று
மாறுபருவமலந்தழிர்ந்தனனால். (௪௨)

உருப்பசிநீங்குபடலமுற்றும்.

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

---

# கந்தியார்.

(Copyright Reserved.)

'கந்தி' என்னும் பெயர் நீலநிறமுடைய ஒருவகைமாணிக்கத்தைச் சுட்டுவது என்றும், இதனை மெல்லியலார்க்குரியபெயராக இட்டுவழங்கல் தமிழ்மரபென்றும் மொழிநூல்வல்லார் ஒருவர் உரைக்கின்றனர். மற்றொருபுலவர் இதற்குக் 'கமுகு' என்று பொருள்கூறி ஆகுபெயர்முறையாற் பெண்பாலரைச் சுட்டி நின்றது என்று உரைக்கின்றனர். நிகண்டுகளில் இப்பெயர்க் குரியபொருளாக அறியக்கிடப்பன பல. நச்சினார்க்கினியரோ—"கறந்தபாலனைய கந்திக் கொம்பு" [சிந்தா. முத்தி. 51.] என்ற விடத்துப் "பால்போல் மிகவுந்தூய கந்தியாகிய்கொம்பு" என்றே உரைகண்டனர். இங்ஙனமான இப்பெயருடன் ஆர் விகுதியை இணைத்துக் 'கந்தியார்' என்று வழங்குவர் ஆன்றோர்.

ஈண்டு இக் 'கந்தியார்' என்னும் பெயர் எண்ணெழுத்தறிந்த ஒரு பெண்மணியைச் சுட்டிநின்றது. அறிந்தவரை இப்பெண்மணியார் இயற்றமிழ்ப்புலமை நிரம்பியவராகவே கருதப்படுகின்றனர். இவர் பிறந்த ஊர் 'பேரை' என்பதாம். இது நூற்றெட்டுத்திருப்பதிகளில் ஒன்று; பாண்டியநாட்டுத் திருக்குருகூர் என்னும் ஆழ்வார்பதிக்குக் கிழக்கே இரண்டுநாழிகைவழியில் இருப்பது; வைணவரால் 'திருப்பேரை' 'தென்றிருப்பேரை' என்று வழங்கப்படுவது. இம்மெல்லியலார் வைணவவகுப்பினர்; நிலங்கடந்தநெடுமுடியண்ணலை வழிபடுதெய்வமாகக் கொண்டவராக எண்ணப்படுகின்றார். பஞ்சகாவியத்துள் ஒன்றாகிய சிந்தாமணியில் இவரால் இடைமடுக்கப்பெற்ற செய்யுட்கள் பலவாம். அவை, இன்ன என அறிந்துகொள்வது அந்நூல் உரைகாருள் ஒருவரான 'ஆசிரியர் உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர்'க்கும் மிக்க அருமையாயிற்று.

| | | | | |
|---|---|---|---|---|
| பதிப்பிக்கப்பெற்றிருக்கும் சிந்தாமணிச்செய்யுளினுடைய மொத்த என் | .... | .... | .... | ... 3145 |
| ஷை நூலிறுதிப்பாதக்குறிப்பிற் காட்டப்படுவது | | | .... | 1 |
| ஷை | ஷை | காட்டப்பெறாதது | .... | 1 |
| | | | ஆக | 3147 |

இவற்றுள் நச்சினார்க்கினியர் உரைப்படி திருத்தக்கதேவர் வாக்கென அறியப்பெற்றன ... ... .... 2700

திருத்தக்கதேவருடைய ஆசிரியர் [தோலாமொழித்தேவர்] கூறிய அருகக்கடவுள்வாழ்த்து ["செம்பொன்"] .... 1

ஷை ஓம்படைச்செய்யுள் ["முந்நீர்வலம்புரி"] ... 1

ஓம்படைச்செய்யுளை அடுத்து நூலாசிரியர்வாக்காகவுந் துள்ளன. .... .... .... .... 2

ஆ 2704

இவ் விரண்டாயிரத்து எழுநூற்றுநான்குசெய்யுட்கள் ஒழிந்த ஏனைய **443** செய்யுட்கள் கந்தியார்வாக்கெனக் கருதப்படுகின்றன; நச்சினார்க்கினியர் 'கந்தியார்கூற்று' எனக் கணித்து எடுத்துக்காட்டிய "தத்தைகுணமாலை" என்னுங் கவியும் 'பகைமாற்று' என்னுங் கவியும்" சேரின் 445 செய்யுட்கள் கந்தியார் உரைத்தனவாகப் போதரும்.

[ஓம்படைச்செய்யுளை அடுத்துநின்ற இரண்டுகவிகளை வேறுபிரித்துத் தேவர்வாக்கென எண்ணியமை "முத் திருபத்தேழ் கோத்துமிழ்ந்து" என்றதன் விசேடவுரைநோக்கி என்க]

'கந்தியார்கவி' என அறிய ஒண்ணாத ஏனைய 443 செய்யுளும் 'இவை தேவர்வாக்கு' 'இவை கந்தியார்வாக்கு' என அறிய ஒண்ணாத அளவிற் சொற்பொருட்டிட்பநுட்பஞ்செறிந்தனவாய்ச் சுவைவளம் பொலிந்தனவாய் ஆசிரியர் நச்சினார்க்கினியர்காலத்திற்குமுன்னரே இடம், முதலியன அறிந்து இடைமடுக்கப்பட்டிருத்தல்வேண்டும் என்றல் ஓர் யூகமாகும்.

நச்சினார்க்கினியர் சிந்தாமணியுரையில் ஓரிடத்து இக் கந்தியார் கண்டபாடத்தையும் ஒரு சிறந்த ஆதாரமாகக்கொண்டுள்ளார். அவர் அவ்விடம் குறித்தது:—'வலம்பிறங் கொளிறும் வேலான்....முன்புறங் கட்டப் பட்டு' [குணமாலை-240] என்றும்—'இமிழிற் பூட்டி' (ஷை-241) என்றும் தேவர்மனத்தை இறுகப்பிணித்தமைதோன்றக் 'கட்டி' என் றும் 'பூட்டி' என்றும் செய்யுள்செய்தமைபற்றிக் 'கந்தியாரும் இடை

யிடையே பாடியிட்ட செய்யுட்களிலும் அப்பொருடரக் கட்டி என்று செய்யுள்செய்தார் என்றுணர்க''—[குணமாலை-239-உரை] என்பது. இத னாற் கந்தியார் தாம் இயற்றிச் சந்தர்ப்பம்நோக்கிச் சிந்தாமணியகத்து, ஆண்டாண்டுமெடுத்தசெய்புட்களிற் 'கட்டி' என்னும் சொற்பிரயோகம் பல வரும் என்பதும் அச்சொற்கு நச்சினார்க்கினியர் கருதிக்கூறியவாறே பொருள்கொள்ளப்படும் என்பதும் பிறவும் புலனாம்.

ஆற்றூரிலிருந்து வரப்பெற்ற 'பலகவித்திரட்டு' என்ற பழைய சுவடி ஒன்றில் இக்கந்தியார்பாடல்கள்சில காணப்படுகின்றன. [இச் சுவடி தந்துதவினோர் தாலூகாபோர்டுமெம்பர் கவிராஜ் A. M. மலை ஐயாப்பிள்ளையவர்கள்.] அவற்றுட் சில ஈண்டுக் காட்டப்பெறும். அவை யாவன:—

"அஞ்சிலோதி யாடவை யஞ்சாய்" எனமுடிக்கவிடுத்த சங்கத் தார்க்குப் பேரை [ை] வணவி கந்தியார்சொற்ற செப்பும் வினாவும்":—

செப்பு

1 " அஞ்சிலோதி யாரிடாற் பேரின் பமைந்திசினே
ரஞ்சிலோதி யன்றோ வறிதலின-லஞ்சிலோதி
யஞ்சிலோதி யாரிப் படுநெல் லறைக்கரும்பு
வஞ்சிலோதி யாடவையஞ் சாய்."

வினா

2 " கொண்டல் வண்ணன் கண்ட சுவைநலங்
கண்டருண்டீர் கேட்டறியீர்
துண்ட மெட்டே தொண்டை கொண்ட
வெண்டிசைக் குத்தி ஞண்டுழுவோல்
மண்டெரி யீனு வெண்டளி யண்டம்
தண்டமிழ் பயில்வீர் கொண்டுரைப் பீரே"

அவர்பாடிய பரிபாடற்பகுப்புத்தொகை வெண்பா.

3. திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத்
தொருபாட்டுக் காடுகாட் கொன்று—மருவினிய
வையைபிரு பத்தாறு மாமதுரை நான்கென்ப
செய்யபரி பாடற் றிறம்."

அவர் பாடிய தோல்காப்பியப் பகுப்புத்தொகை வெண்பா.

(எழுத்து)

4. நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகைமரபு— பாலா
முருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கந்
தெரிவரிய குற்றுகரஞ் செப்பு.

5. எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லா
மொழுக்கிய வொன்பதோத் துள்ளும் வழுக்கின்றி
நானூற் றிருநாற்பான் மூன்றென்றே நாவலர்கண்
மேனூற்று வைத்தார் விரித்து.

[சோல்]

6. கிளவியாக் கம்மே கிளர்வேற் றுமைச்சொல்
லுளவேற் றுமைமயக்க மோங்கும்—விளிமரபு
தேற்றும் பெயர்வினைச்சொற் சேரு மிடையுரிச்சொற்
றேற்றியிடு மெச்சவியல் சொல்.

7. "தோடவிழ் பூங்கோதாய் சொல்லதி காரத்துட்
கூடிய வொன்பதியற் கூறிற்கும்—பாடமாம்
நானூற் றறுபத்து நான்கேநன் னூற்பாக்கள்
கோனூற்று வைத்த குறி"

[போருள்]

8. "ஈட்டு மகத்திணையு மெய்தும் புறத்திணைபுங்
காட்டுங் களவியலுங் கற்பியலும்—நாட்டும்
பொருளியன்மெய்ப் பாட்டுவமம் போற்றிய செய்யுண்
மரபியலு மாம்பொருளின் வைப்பு"

9. பூமலிமென் கூந்தால் பொருட்படல நூற்பாக்க
ளாவவது நூற்றறுபத் தைந்தாகும்—மூவகையி
னுயிரத்தின் மேலா யறுநூற்றி ராறென்ப
பாயிரமோ வோரிரண்டென் பார்"

சிந்தாமணிபற்றிப் பாடியகவி.

10. "தத்தைகுண மாலையொடு தாவில்புகழ்ப் பதுமை
யொத்தவெழிற் கேமசரி யொண்கனக மாலை
வித்தகநல் விமலையொடு வெஞ்சுரமஞ் சரிதா
னத்தகைபி லக்கணையொ டாகமணமெட்டே."

11. "பகைமாற் றெருநற் பான்வாழ்த் தவைச்சொற் பதிகவிலம்பகமோ
வகைமாற் றெருநா மகளோர் கோவிந்தை மணமுறு தத்தைகுணம்
மிகைமாற் பதுமை கேமசரி கனகம் விமலையர் வீழ்சுரமஞ்
சகைமாற் றெடுமண் மகள்பூ விலக்கணை முத்தியீ ராறென்றே."

என்பனவே.

இவற்றுள், 3வது இலக்கப்பாட்டு, இரண்டாவதடியில் வேறுபாட மாக ஆக்கப்பெற்று ("ஒருபாட்டுக் கார்கோளுக் கொன்று" என்று பாடங் கொண்டு) சிற்சிலரால் பதிக்கப்பட்டிருக்கிறது.

4வது 5வது எண்ணத்தில்வரும்பாட்டுக்கள் பூரணவடிவுடன் அச்சிடப்பெற்ற தொல்காப்பிய எழுத்ததிகார நச்சினார்க்கினியருரைப் புத்தகத்திற் காணப்படுகின்றன.

8வது 9வது இலக்கப்பாக்கள், சிற்சில உருவவேற்றுமையுடன் செந்தமிழிற் காணப்படும். 10வது எண்ணப் பாட்டோ--சிந்தாமணிப் பதிப்பாசிரியரால் ஷை நூலினிறுதியிற் காட்டப்பெற்றுள்ளது.

ஏனைய 1, 2, 6, 7, 11வது இலக்கப்பாக்கள் இதுவரை அச்சின் வாய்வரப்பெற்றிருப்பதாகத் துலங்கவில்லை.

நிற்க, பரிமேலழகர் பரிபாடற்கும் உரை இயற்றியிருக்கின்றனர் என்பது பலரும் நன்கறிந்ததொன்றும். அவரது தற்சிறப்புப்பாயிரம் எனக் கருதப்படும் "கண்ணுதற்கடவுள்" என்ற ஆசிரியத்திடையே அவர் இக்கந்தியாரைப்பற்றிச் சிற்சில சுட்டி உரைத்துள்ளார். "ஆசற்றார் கண்ணுங் தெரியுங்கால் இன்மையரிதே வெளிறு" என்ற மெய்ம்மொழி உண்மையாக்கொள்ளப்பெறுமாயின், இறைவன் ஒழிந்த ஏனையர் முற்றறிவுபெற்றிலாதல்பற்றி இந் நல்லிசைப்புலமைமெல்லிய லாது குணமேம்பாடே அறிஞர்க்குச் சிறந்துவிளங்கும் [என்றல்] ஒரு

தலையாவதுடன் இவரும் பிறராற் போற்றப்படுவதற்குத் தக்கார் என்பதும் புலனும். தத்தம் புலமைமிகுதியை வியந்தும், பிற பேணியும், நுண்ணுணர்வினரையும் அஃதிலரென ஒரோவழி இகழ்ந்துரையாடல் சான்றோராற் பேணப்படுவதொன்றன்று. நிற்க

பரிபாடலில், "தந்திடைமடுத்தகந்தி" என்ற பரிமேலழகர்வாக்கானும், முன்னர்க்கூறப்பெற்ற நச்சினார்க்கினியர்வாக்குக்களானும் இக்கந்தியார் அவ்விருவர்காலத்திற்கும் முற்பட்டவர் என்றல் தெளிவாம்.

கால இடங்களைநோக்கித் தொன்னூல்களினிடையே சொற்பொருணயன்மலிந்த பாக்கள்பல பிற்காலத்தவரால், இடைமடுக்கப்பட்டுள்ளனவாகப் பிறவிடங்களிலும் கேட்கப்படுகின்றன. அவற்றுள் ஒன்று, வெள்ளியம்பலத்தம்பிரான் என்பவராற் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர்புராணத்தகத்துப் பல பாக்கள் இடைமடுக்கப்பெற்றன என்பது; சென்றநூற்றாண்டின்தொடக்கத்திலிருந்தவரான நல்லாப்பிள்ளை என்பாரும் 'வில்லி' வாக்குக்களின் இடையே, தமது இனியபாக்களை மகாபாரதத்துத் தந்திடைமடுத்தனராவர். அவர் பாடியன சமீபகாலத்தனவாகலின், வில்லிபுத்தூரார்வாக்கு இவை என்று அறிந்த வல்லார் இப்பிள்ளைவாக்கை ஒட்டி நட்சத்திர அடையாளம் பொறித்து அச்சேற்றி வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் வெள்ளியம்பலத்தம்பிரான் என்பார் இடைமடுத்தனவோ, நெடுநாளாக எட்டியும், சுட்டியும் உரைக்கப்படுதலன்றி இதுவரை வேறு பிரித்தெடுத்துக் காட்டப்பெற்றில.

(தொடரும்)

---

பெயர்விழையான்.

# வேள்விக்குடிச் செப்பேடுகள்.

## முன்னுரை.

(கே. ஜி. சங்கரன் இயற்றியது).

இவ்வேடுகளை, 1893-ல் வெங்கையர் அவர்கள் பதிப்பிக்க நினைத்தார்கள் (Indian Antiquary தொகுதி 22 பக் 61). அதன்பிறகு, 29 ஆண்டுகள் சென்றுவிட்டன. ஆயினும், அவைகள் இன்றும் பதிப்பிக்கப்பெறவில்லை. ஆகையால், Dr. L. D. Barnett அவர்கள் அன்புடன் உதவிய லண்டன் பிரிட்டிஷ்மியூஸியத்திலிருக்கும் இவ்வேடுகளின் மஷிப்படங்களிலிருந்து நான் இப்பொழுது அவைகளைப் பதிப்பிக்கத் துணிந்தேன்.

இப்பத்து ஏடுகளில், ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் செய்யுள் உரைநடைகளமைந்த 155 வரிகள் உள்ளன. ஸம்ஸ்க்ருத பதங்கள் கிரந்தத்திலுள்ளன. தமிழ்ப்பதங்கள் வட்டெழுத்திலுள்ளன.

ஸம்ஸ்க்ருதப்பகுதியில் அடங்கியவரலாறுகள் பின்வருவன.

ஹிரண்யகர்ப்பமும் துலாபாரமும் இயற்றிய மாறவர்மன் என்றொரு பாண்ட்யன் இருந்தான். அவன்மகன் ரணதீரனென்று புகழ்பெற்றிருந்தான். அவன்மகன் ராஜஸிம்ஹன் என்ற மாறவர்மன் பல்லவமல்லனைப் புறங்கண்டு, ஹிரண்யகர்ப்பமும் துலாபாரமும் இயற்றி, மழவராஜன் மகள் பூஸுந்தரியை மணந்தான். அவர்கள் மகன் ஜடிலபராந்தகன் ஆண்டுகொண்டிருந்தான்,

தமிழ்ப்பகுதியில் அடங்கிய வரலாறுகள் பின்வருவன.

பாண்ட்யன் பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதி கொற்கையிலிருந்து நற்கொற்றனுக்கு வேள்விக்குடியை அளித்தான். அவன் வழிப்பிறந்தவர் நெடுங்காலம் அதை அநுபவித்தபிறகு, பாண்ட்யரை விலகநீக்கி களப்ரன் அதைத் தன்கைக்கொண்டான். சிறிதுகாலம் சென்றபின்பு, பாண்ட்யன் கடுங்கோன் திரும்பிவந்து தன்னாட்டை மீட்டுக்கொண்டான். அவன்மகன் அவனிசூடாமணி என்ற மாறவர்மன். அவன் மகன் செழியன்வானவன் என்ற சேந்தன் (வடமொழியில் ஜயந்தன் எனப்படும்), அவன் வழிப்பிறந்த அரிகேஸரி (பகைவர்க்கொருஸிம்ஹம்)

அஸமஸமன் (தாழ்ந்தவர்க்கினியவன்) என்ற மாறவர்மன் பாழியிலும் செந்நிலத்திலும் வென்றும், நெல்வேலியில் வில்வேலியைப் புறங்கண்டும், குறுநாடரை முறியடித்தும், நாடெங்கும் தனிச்செங்கோல் கோளனைப் பலமுறை வென்றும், கோழி என்ற சோழர்தலைநகர் உறையூரைக் கைக்கொண்டும், ஹிரண்யகர்ப்பமும் துலாபாரமும் இயற்றினன். அவன் மகன் தென்னவானவன், செம்பியன்சோழன், மதுரகருநாடகன், கொங் கர்கோமான் என்ற சடையன் மருதூரில் வென்று, தென்திருவாங்கூரில் ஆண்ட ஆய்வேளை அழித்து, மங்கலபுரம் என்னும் மஹாநகரில் மஹா ரதர் என்ற மேலச்சளுக்யரைப் புறங்கண்டான். அவன்மகன் மாறன் நெடுவயலிலும், குறுமடையிலும், மன்னிகுறிச்சியிலும், திருமங்கை யிலும், பூவலூரிலும், கொடும்பாளூரிலும் வென்று, குழும்பூரில் பல்ல வனைப் புறங்கண்டு, பெரியலூரில்வென்று, காவேரிக்கரையில் மழகொங் கத்தைக் கீழ்ப்படுத்தி, கொங்கரசன் கங்காராஜன்மகளைமணந்து, கோஸ ஹஸ்ரமும், ஹிரண்யகர்ப்பமும், துலாபாரமும் செய்து, கூடல், வஞ்சி, கோழி என்று பெயரிடப்பட்ட மதில்களையும் புதுக்கினன். அவன் மகன் தென்னவானவன், ஸ்ரீவரன் (ஸ்ரீமான்), ஸ்ரீமநோஹரன், சினச் சோழன், புனப்பூழியன், வீதகல்மஷன் (மலம் கெடுக்கப்பட்டவன்), விநய விச்ருதன் (தாழ்மைக்குப் பெயர்பெற்றவன்), விக்ரமபாரகன் (விக்ரமத் தின் கரைகண்டவன்), வீரபுரோகன் (வீரர்களில் முதன்மைபெற்றவன்), மருத்பலன் (காற்றின்வலி உடையவன்), மாந்யசாஸநன் (கொண்டாடப் பட்ட அதிகாரத்தை உடையவன்), மநூபமன் (மநுவுக்கு உவமை ஏற் பவன்), மர்த்திதவீரன் (மிதிக்கப்பட்ட வீரர்களை உடையவன்), கிரிஸ் திரன் (மலையைப்போல் அசையாதவன்), கீதிகிந்நரன் (பாட்டில் கிந்நரன்), க்ருபாலயன் (கருணைக்கிருப்பிடம்), க்ருதாபதாநன் (நினைத்ததை நிறை வேற்றுகிறவன்), கலிப்பகை, கண்டகநிஷ்டுரன் (தீயவரிடம் இரக்கமில்லா தவன்), கார்யதக்ஷிணன் (கார்யங்களில் தேர்ந்தவன்), கார்முகபார்த்தன் (வில்லில் அர்ஜுனன்), பராந்தகன் (பகைவரைத்தொலைப்பவன்), பண்டித வத்ஸலன் (படித்தவரிடம் ப்ரியம்வைப்பவன்), பரிபூர்ணன் (நிறைந்த வன்), பாபபீரு (பாபத்தைஅஞ்சுகிறவன்), குணக்ராஹ்யன் (குணத்தை ஏற்பவன்), கூடநிர்ணயன் (பிறரறியாமல் ஆலோசனை செய்பவன்) என்ற நெடுஞ்சடையன் பல்லவனைக்காவேரித்தென்கரையில் பெண்ணாகடத்தும், ஆய்வேளையும் குறும்பரையும் நாட்டுக்குறும்பிலும் புறங்கண்டான். அவ னது மூன்றும்ஆண்டில், நற்கொற்றன் வழிப்பிறந்தவன் ஒருவனுக்கு

வேள்விக்குடியை மறுபடியும் அளித்தான். இதற்கு ஆணத்தி கொங் காசன் கங்காராஜனையும் வெண்பையில் வல்லபன் என்ற மேலச்சளுக்யனை யும் புறங்கண்டு, கங்காராஜன்மகளைப் பூர்வராஜன்ஆயின ராஜஸிம்ஹனு க்கு மணம்முடித்த, களக்காடு (திருநெல்வேலிஜில்லா) என்ற காவந்த புரத்துவைத்யன், கவி, மதுரதரன் (மிகவும் இனியவன்), மங்கல்ராஜன், மூவேந்தமங்கலப்பேரரையன் என்ற மாறன்மகன் காரி.

மேற்கூறப்பட்ட முதுகுடுமி தென்திருவரங்கூரில், பறளியாறு என்று பஃறுளியாற்றைவெட்டின வடிம்பலம்பநின்றபாண்ட்யனின்(புறம் 9-ம், உரையும்) வழிப்பிறந்தவனும், தலையாலங்கானத்துவென்ற நெடுஞ் செழியனின் முன்னவனும் (மதுரைக்காஞ்சி 759-60) ஆவான். ஆகை யால், அவன் சங்ககாலத்திலிருந்தவன்.

தென்னாட்டவரின் பட்டியில், கி. பி. 500-ல் இருந்த வராஹமிஹி ரர் களப்ராரைக்கூறவே இல்லை. ஆனால், கி. பி. 7, 8-ம் நூற்றாண்டுகளில், பல்லவர்களில் ஸிம்ஹவிஷ்ணுவும், முதலாவது நரஸிம்ஹவர்மனும் (South Indian Inscriptions தொகுதி ii. பக்கம் 356; தொகுதி i. பக்கம் 152), மேலச்சளுக்யரில் முதலாவது விக்ரமாதித்யனும், விநயா தித்யனும், இரண்டாவது விக்ரமாதித்யனும் (Ind. Ant. தொ ix. ப 129; தொ vii. ப 303; Epigraphia Indica தொ v. ப 204) களப் ரரை வென்றதாகக்கூறிக்கொள்கிறார்கள். சங்கச்செய்புள்களில் எங்கும் அவர்கள் கூறப்படாததால், அவர்கள் ப்ரபலமாய் இருந்த காலத்திற்கு முன்னோ, பின்னோதான் சங்ககாலம் ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால், இச்செப்பேடுகளிற் கண்ட பாண்ட்யரில் ஒருவனும் சங்கச்செய்புள் களிற் பாடப்பெறாததால், கி. பி. 750-க்குப் பின்னர் அல்லாது, கி. பி. 600க்கு முன்னரே சங்ககாலம் என்று துணியப்படும். பாண்ட்யரை விலக நீக்கின களப்ரனே பின்னர்க் கடுங்கோனால் விலக்கப்பட்டதால், பாண்ட்ய நாட்டில் களப்ராது ஆக்ரமம் சிறிதுகாலமே என்றும் துணியப்படும்.

இவ்வேடுகள் வெட்டப்பட்டகாலத்து ஆண்டுகொண்டிருந்த நெடுஞ் சடையன் என்ற ஜடிலபராந்தகனது மூன்றாவது முன்னவனாயின தமிழ்ப்பகுதியின் இரண்டாம் மாறவர்மனும் ஸம்ஸ்க்ருதப்பகுதியின் முதலாவது மாறவர்மனும் ஒருவனே ஆகவேண்டும். அவனும் அவன் பெயரனும் இருபகுதியிலும் ஹிரண்யகர்ப்பமும் துலாபாரமும் இயற் றியதாகக் கூறப்படுகிறார்கள். பின்னவன் கோஸஹஸ்ரமும் செய்ததாகக்

கூறப்படுகிறான். இவைகளில், முறையே தான் நுழைந்துவந்த பொன் பசுவையும், தன்நிறையுள்ள பொன்னையும், 1000 பசுக்களையும் அரசன் அந்தணர்க்கு அளிக்கவேண்டும். இவர்களில், முதலாவது மாறவர்மன் பாழியிலும், செந்நிலத்திலும், நெல்வேலியும் வென்ற மாறன் அரிகேஸரி என்ற இறையனர் அகப்பொருளுரையில் அடங்கின கோவையின் தலைவனும், சம்பந்தமூர்த்திகளால் சைவனாக்கப்பெற்ற நெல்வேலிவென்ற நெடுமாறநாயனாரும் ஆவான்.

மாறன்பகைவன் வில்வேலியானதாலும், நந்திவர்மன் பல்லவமல்லன் ஸேனைத்தலைவன் உதயசந்த்ரனின்பகைவன் சபரவாசன் உதயனன் ஆனதாலும், இந்நெல்வேலிப்போர் வேறு, உதயசந்த்ரன் வென்ற நெல்வேலிப்போர் வேறு. மேலும், மாறன் வென்ற சங்கமங்கைப்போர்வேறு. உதயசந்த்ரன் வென்ற சங்கரக்ராமப்போர் வேறு. (South Ind Insc. தொ ii. 74-வது சாஸநம்).

இம்மாறன் அவன் முன்னவனின்மகன் என்னாது வழிப்பிறந்தவன் என்றே கூறப்படுவதாலும், அவன்புறங்கண்டகேரளன் நாடெங்கும் தனி அரசன் என்று கூறப்படுவதாலும், சேந்தனுக்குப்பிற்காலம் பாண்ட்ய நாட்டைக் கேரளன் ஆக்ரமித்தான் என்றும், தன்னாட்டை மீட்பதற்கு அவனுடன் பலமுறையும் மாறன் பொரவேண்டியிருந்ததென்றும் தோன்றுகிறது. கொல்லிகாவலன், கூடல்நாயகன், கோழிக்கோன் என்று கூறிக்கொள்ளும் குலசேகராழ்வாரே இக்கேரளன் என்று கூறத்தகும்.

சடையன் என்ற அடுத்த அரசனுக்கு ரணதீரன் என்ற பட்டப் பெயர் இருந்திருக்கவேண்டும்.

அவன்மகனே ஸம்ஸ்க்ருதப்பகுதியின் ராஜஸிம்ஹன் ஆவான். அவன்பல்லவமல்லன் என்ற நந்திவர்மனைப் புறங்கண்டதாகக் கூறப்படுவதால், அவன்பொருத மன்னிகுறிச்சியும், உதயசந்த்ரன் பாண்ட்யரொடு பொருத மண்ணைக்குடியும் ஒன்றாய் இருக்கலாம். மழவஅரசன்மகள் பூஸுந்தரி கங்கராஜன்மகளாய் இருக்கவேண்டும். ஸிம்ஹவிஷ்ணுவும், விஜயாதித்யனும் மழவரை வென்றதாகத் தெரிகிறது (S. I. I. ii. 356; I. A. vii 303). வெண்பையில் மாறன்காரி வென்ற வல்லபன், பாண்ட்யருடன் பொருத இரண்டாவது விக்ரமாதித்யன் ஆகவேண்டும் (Epi. Ind. ix. 205).

இதன் ஆணத்தி ஆனைமலைக்கோயிலைக்கட்டி, கலி 3871, கார்த்திகைமாஸம், ஞாயிற்றுக்கிழமை, ரேவதிநாளான கி. பி. 770 நவம்பர் 4-இல் ப்ரதிஷ்டைசெய்த, பாண்ட்யன் மாறஞ்சடையன் பராந்தகனுக்கு உத்தரமந்த்ரியான கரவந்தபுரத்து வைத்யன், கவி, மதுரதரன், மூவேந்த மங்கலப் பேரரையன் என்ற மாறன்மகன் காரியேஆகவேண்டும். ஆனால் அவன், ப்ரதிஷ்டைநடந்து, சிறிதுகாலத்திலேயே இறந்துவிட்டான். ஆகையால், அவனுக்குப்பிறகு உத்தரமந்த்ரிபதம் அடைந்த பாண்டி மங்கலவிசைஅரையன் என்ற அவன் தம்பி மாறன்எயினன், முகமண்டபத்தைச்செய்து அதையும் நீர்த்தளித்தான் (E. I. viii. 317-21). தளித்து என்பதின் ப்ரயோகத்தை ஐங்குறுநூறு 328-ல் காண்க.

கி. பி. 770-ல் மாறன்காரி இறந்துவிட்டதால், அவன் ஆணத்தியாயிருந்த இவ்வேடுகளும், அவைகளின்காலமான ஜடிலனின் 3-வது ஆண்டும் கி. பி. 770க்கு முந்தவேண்டும். ஆகையால், ஜடிலன் கி. பி. 767-க்கு முன்னரே பட்டம் எய்தியிருக்கவேண்டும்.

---

# வேள்விக்குடிச் செப்பேடுகள்.

[குறிப்பு:—இவைகள் Dr. L. D. Barnett உதவிய மஷிப்படங்களிலிருந்து, பிழைகளைத் திருத்தாமல், உள்ளபடியே பதிப்பிக்கப்படுகின்றன. வேண்டுவோர் பிழைகளைத் திருத்திக்கொள்ளலாம். இவைகள் இதுவரை ஒருவராலும் பதிப்பிக்கப்படவில்லை.—கே. ஜி. சங்கரன்.]

ஏடு-i; பக்கம் 2. விளிம்பில்.

(வ.ரி-௧) ஸ்வஸ்தி ஶ்ரீ யஸ்ய ஶ்வஶுரஶ்ஶிஶிராம்ஶுஶேகர: ஶிவஶ்ருதா
திர்வ்ருதிஸ்வகாரணம் । தநோதி ஸலவணக்ஷோதக்ஷமம்
காதவ(௨)கதவத்ருத: நஃ விஶ்வம் ஸாராஸ்ராந்தே ஶேஷவி
ஶ்ருகாரணம் (௩) (௪) கல்பாந்தம் ஸவிவேத்யாத நய: வாண்யா ஸ
ஜ்ருதாம் கஸ்ரம் ஜய க்ஷிதியாம் வ்ருவிஜ்ரம் ஸோண ஸம்ஸ (௫) ஸ்வஸ்தஸவி
வைஜ்ஞயஶ்ச்யஃஸ: காஸ்ஹோத்ரவோஸவதியஸ்யஸா நிஃ வாரோ
யாஸ்ஸ்ரீநியி । (௬) ஜஸ்ய தீவாண்யாநரோக்ரவாஸ: ॥ கஸ்யாத்ருதி
:ஸ்ரு ஸாவஸ்வஸ்திதஃவோண்யாஸிபரோநாதியெ (௭) ஸீஸா ஸ்யாஸிஸவி

[illegible]

## ஏடு ii. பக்கம் 1.

(வரி.க) [illegible]

## ஏடு ii பக்கம்-2. (விளிம்பில்-2).

(வரி-க) [illegible]

## ஏடு iii. பக். 1.

(வரி-க) [illegible] (உ) [illegible] (ந) [illegible] (ச) [illegible] (ரு) [illegible] (சா) [illegible] (எ) [illegible]

## ஏடு iii. பக்-2 (விளிம்பில்-3).

(வரி-1) [illegible] (2) [illegible] ஞற்செ (3) ய்யப்பட்டது-III-கொல்யானைபலவோட்டிக் கூடாமன்னர் குழாந்தவி- (4) -ர்த்த, பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதி என்னும் பா ண்ட்யாதிராஜனு (5) ஞகமாமலர்ச்சோலைநளிர்சிலைமிசைவண்டலம்பும், பாகனூர் (6) க்கூற்றமென்னும்பழனக்கிடக்கைநீர்நாட்டுச், சொற்கண்ணு ளர்சொ (7) லப்பட்ட ஸ்ருதிமார்க்கம் பிழையாதுகொற்கைகிழானற் கொற்றன்கொண் (8) டவேள்விமுற்றுவிக்க, கேள்வி அந்தணாளர்முன்பு கேட்க என்றெடுத்-

## ஏடு iv. பக். 1.

(1) துரைத்து, வேள்விசாலைமுன்புநின்றுவேள்விகுடி என்றப்பதியைச், சி (2) ரொடுதிருவளரச்செய்தார்வேந்தனப்பொழுதேய், நீரோட்டிக்கொ டுத்தமை (3) யானிடு [illegible] துத்தபின், னளவரிய ஆதிராஜரை அகலநீக்கி அகலிடத்தை, (4)க் களப்ரனென்னுங்கலிஅரைசன் கைக் கொண்டதனை இறக்கியபின், படுகடன்முளை (5) த்தபருதிபோல் பா ண்ட்யாதிராஜன் வெளிப்பட்டு, விடுகதிரவிரொளி விசும்பொடுகவிற்றி (6)ருந்து,

வேலைசூழ்ந்தவியலிடத்துக், கோவுங்குறும்பும்பாவுடன்முருக்கிச், செ (7) ங்கோலோச்சிவெண்குடைநீழற், றங்கொளிநிறைந்ததாணி மங்கையைப், பிறர் (8) பாலுரிமைதிறவிதினீக்கித், தன்பாலுரிமைநன்கனமமைத்த, மானம்பே (9) ர்த்ததாணைவேந்தன், ஒடுங்காமன்னவொளிநகரழித்த, கடுங்கோனென்னுங்கதி- (10) ர்வேற்றென்னன், மற்றவற்குமகனாகி ஸ்ரீ அவனிசூளாமணி, எத்தி-

ஏடு iv பக்-2. (விளிம்பில்-4).

(1) டுமனையர்ந்த, அற்றமில்பாவைத்தானை, சூயிராஜநு அவனிசூளாமணி, எத்தி- (2) றத்துமிகலழிக்கு மத்தயானை ஸ்ரீமாறவர்மநுமற்றவற்கு மருவினிய ஒருமகனா- (3) கி, மண்மகளைமறுக்கடிந்து, விக்ரமத்தின் வெளிற்பட்டுவிலங்கல்வேல்பொ-(4) றிவேந்தர்வேந்தன், சிலைத்தடக்கைக் கொலைக்களிற்றுச், செழியன்வானவன் (5) செங்கோற்சேந்தன், மற்றவற்குப்பழிப்பின்றிவழித்தோன்றி, உதயகிரிமத்யம (6) த்துறுசுடர்போலத், தெற்றென்று திசைநடுங்க, மற்றவன்வெளிற்பட்டுச், சூ-(7) ழியானைசெலவுந்திப், பாழிவாயமர்கடந்து, வில்வேலிக்கடற்றானையை, (8) நெல்வேலிச்செருவென்றும், விரவிவந்தடையாதபாவரைப்பாழ்படுத்- (9) து, மறுகாவினம்புடைதிளைக்குங்குறுநாட்டவர்குலங்கெடுத்து-(10)ங், கைந்நலத்தகளிறுந்திச் செந்நிலத்துச்செருவென்றும், பாரளவும்-

ஏடு v. பக் 1.

(1) தனிச்செங்கோற் கொற்றவனைப்பலமு[றையுமு]றி[மை]ச்சுற்றுமா.... யானை-(2) உம், புரிசைம்மதிற்புலியூரப், பகலொழிகைஇறவாமை இக்கோ- (3) ழிஉள்வென்றுகொண்டும், வேலாழிஉம்வியன்பரம்புமேலாமைசென்- (4) றெறிந்தழித்தும், ஹிரண்யகர்ப்பமுந் துலாபாரமுந், தாணிமிசைப்பலசெய்து, (5) சுஹ்ணர்க்கும் கஶுகர்க்கும் வந்தணைக என்றித்தளித்த, ஸகரிகை அணிமணி-(6) நெடுமுடி சுரிகெஸரி ஸஜ்ஜ ஸலீநு ஸ்ரீமாறவர்மநு மற்றவற்கு மகனாகிக் கொற்றவே-(7) ல் வலனேந்திப், பொருதுருங்கடற்றானைபை மருதூருண்மாண்பழித், தாய்வே(8)-ளா அகப்பட எயென்னுமை எறிந்தழித்துச், செங்கொடிஉம்புதான்கோட்- (9) டுஞ் செருவென்றவர்சினந்தவிர்த்துக், கொங்கலருந்நறும்பொழில் வாய்க்கு-(10) இலோடுமஇலகவு, மங்கலபுரமென்னும் மஹா நகரம்ன் மஹாரயநெரை-எ

ஏடு v. பக் 2. (விளிம்பில்-5).

(1) ரிந்தழித்தறைகடல்வளாகம் பொதுமொழிஅகற்றிச், சிலைஉம்புலி
உங்-(2) கயலுஞ்சென்று, நிலையமைநெடுவரை இடவயிற்கிடாய், மண்ணி
னிதாண்ட-(3) தண்ணளிச்செங்கோற், றென்னவானவன் செம்பியன்சோ
ழன், மன்னர்மன்னன்மது-(4) ரகருநாடகன், கொன்னவின்றநெடுஞ்சுடர்
வேற்கொங்கர்கோமான் கோச்சடையன், (5) மற்றவற்கு வான்றுணையமண்
மகளதுபொருட்டாக மத்தயானைசெலவுந்தி மான-(6) வேல்வலனேந்திக்,
கடுவிசையாலெதிர்ந்தவரை நெடுவயல்வாய்நிகரழி-(7)த்துக், கழுவடைந்த
மனத்தவரைக் குழுமடைவாய்க்கூர்ப்பழித்து, ம-(8) ன்னிகுறிச்சிஉந்
திருமங்கைஉ முன்னின்றவர்முரணழித்து, மேவலோ (9) ர்கடற்றானை
ஓடேற்றெதிரேய்வந்தவரைப், பூவலூர்ப்புறங்கண்டுங், (10) கொடும்புரி
சைந்நெடுங்கிடங்கிற் கொடும்பாளூர்க் கூடார் கடும்பரி-

ஏடு vi. பக். 1.

(1) உங், கருங்களிறுங் கதிர்வேலிற்கைக்கொண்டுஞ், செ(ழும்புரவிப்)பல்-
லவனை[க்]- (2) குழும்பூருட்டேசழிய, எண்ணிறந்தமால்களிறுமிவுளிக
ளும் பலகவர்ந்-(3) தும், தரியலராய்த்தறித்தவரைப்பெரியலூர்ப்பிடழித்
தும், பூவிரிஉ-(4) ம் பொழிற்சோலைக்காவிரியைக்கடந்திட், டழகமைந்த
வார்சிலைஇன்மழகொ-(5) ங்கமடிப்படுத்து, மின்டொளியமணிஇமைக்கு
மெழிலமைந்தநெடும்பு- (6) ரிசைப், பாண்டிக்கொடுமுடிசென் றெய்திப்
பசுபதியது பத்மயுகம் பணிந்தே-(7)த்திக், கநகராசிஉங்கதிர்
மணிஉம் மனமகிழக்குடுத்திட்டுங், கொங்க-(8) ரவந்நறுங்கண்ணிக் கங்க
ராஜனொடு ஸம்பந்தஞ்செய்தும், எண்ணிறந்தன-(9) கோஸஹஸ்ர
மும் ஹிரண்யகர்ப்பமுந் துலாபாரமும், மண்ணின்மிசைப்பலசெய்து
ம(10)றைநாவினோர்குறைதீர்த்துங் கூடல்வஞ்சிகோழிஎன்னுமாடமாமதி-

ஏடு vi. பக். 2. (விளிம்பில்-6).

(1) ல் புதுக்கிஉம், மறைகடல்வளாகங்குறையாதாண்ட, மன்னர்மன்ன
தென்னவர்மருக-(2) ன், மானவெண்குடைமான்றேர்மாறன், மற்றவற்கு
மகனாகிமாலுருவின்வெளிப்ப-(3) ட்டுக், கொற்றமுன்றுடனியம்பக்குளிர்
வெண்குடைமண்காப்ப, பூமகளும்பு-(4) லமகளுந்நாமகளுந்நலனேத்தக்,
கலிஅரைசன்வலிதளரப்பொலிவினொடுவீ- (5) ற்றிருந்து, கருங்கட
லுடுத்தபெருங்கண்ஞாலத்து, நாற்பெரும்படைஉம்பா-(6) ற்படப்பாய்

பிக், கருதாதுவந்தெதிர் மலேந்தகாடவனைக்காடடையப், பூவி-(7) ரிஉம் புனற்கழினிக் காவிரிஇன்றென்கரைமேற் ,றண்ணுகம்மலர்ச்சோலை-(8) ப் பெண்ணுகடத்தமர்வென்றுந், திவாய்அஇலேந்திக்கிளைத்தெதிரேய்வந்-(9) திறுத்த, ஆய்வேளைஉங்குறும்பரைஉடமைருளழிந்தோட்டிக், காட் டு-(10) [க்] குறும்புசென்றடையநாட்டுக்குறும்பிற்செருவென்று, மறை கடல்வளா-

ஏடு vii. பக். 1.

(1) க [மொ] ரு [மொ] ழிக்கொளிஇய, சிலேமலிதடக்கைத்தென்னவான வன்அவனே-(2) ய், ஸ்ரீவாநு ஸ்ரீமெநாஹாநு சினச்சோழியன் புனப் பூழியன், வதிகநுஷநு (3) விநயவிஶுதநு விகுமவொநகுநு வீர வரொாகநு மௗஉவுநு மாநூஶாஸநநு உநபிவநு (4) உதிர்த வீரநு மிஶிவீரநு நீதிகிஹநு கூவாலயநு கூதாவதாநநு கலிப்பகை கணு(5) கநிஷூநு காயஷிகூிணநு காமிகவாயநு வராஹகநு வஷிதவஷூநு வரிவபிணநு வா (6) வஹீரு குரைஉறு கடற்படைத் தானை ஶுணஶுாஹ்நு ஶபிஜநிணயநு நிரைஉறுமல-(7) ர் மணிநீன்முடிநெரிய, கோன்னெடுஞ்சடையமற்றவன் றன், ராஜுவஷூநு மூன்று-

ஏடு vii. பக்-2. (விளிம்பில்-1).

(1) வது செலாநிற்ப, ஆங்கொருநாண், மாடமாமதிற்கூடற்பாடுநீத்தவர் (2) குகொரயிக்கக், கொற்றவனேய்மற்றவரைத்தெற்றெனநன்குகூவி, என்னேய்நுங்குறை-(3) என்றுமுன்னுகப்பணித்தருள, மேஞணின்குரவ ராற்பான்முறைஇன்வ-(4) ழுவாமை, மாகந்தோய்மலர்ச்சோலேப்பாகனூர்க் கூற்றுத்துப்படுவது, (5) ஆள்வதானே அடல்வேந்தேய் வேள்விகுடி என் னும்பியநுடையது, ஒ-(6) ல்காதவேற்றுனே ஓடோதவேலி உடன்காத்த பல்யாகமுதுகுடுமி- (7) ப்பெருவழுதி என் னும் வாஜெஶூரணுற், வேள்விகுடிஎன்னப்பட்டது (8) கேள்வியிற்றரப்பட்டதனைத், துளக்க மில்லாக் கடற்றுனேயாய் களஷு (9) ரா விறக்கப்பட்டது, என்றுநின் றவன் விஜூாவஞ்செய்ய நன்றுநன்றென்று-(10) முறுவலித்து, நாட்டா ரின்பழமைபாதல் காட்டி [கேள] ன்றுநாட்டிற்றன்.

ஏடு viii. பக்-1.

(1) பழ[மைபாதலைகாட்டி]ஹறங்க[ப்பொ]ழுதே[ய்காட்]ட, மேனுளை[நங்]குர-(2)வாற்பான்முறைஇற்றாப்பட்டதை, எம்மாலுந்தரப்பட்டதென்று செ-(3) ம் மாந்தவனெடுத்தருளி, விற்கைத்தடக்கை விறல்வேந்தன்கொற்கைகிழா-(4) ன் காமக்காணிநற்சிங்கற்குத், தேரோடுங்கடற்றானையான்னீரோடட்டிக்கொ-(5) டுத்தமைஇன், மற்றிதற்குப் பெருநான்கெல்லை தெற்றென விரித்துரைப்-(6) பிற், புகாறுபொழின்மருங்குடுத்நகரூரெல்லைக்கும் மேக்கும், மற்றிதற்கு (7) த்தெ‌ன்எல்லை, குளந்தைவங்கூழ்வந்தைசைக்குங், களந்தைக்குளத்திலானுக்கு (8) வடக்கும், மற்றிதற்குமேலெல்லை, அற்றிமில்லாக்கொற்றன்புத்தூர், ரொடுமைய்இ-(9) ருப்பைச்செய் இடைமேற்றலைப்பெருப்பிற்குக்கிழக்கும்; மற்றிதற்குவடபா-

ஏடு viii. பக். 2.

(1) லெல்[லை]காயலுட்கமலம்மலரும்பாயலுள் வடபாலைப்பெருப்பிற்குத்-(2) தெற்கும், இவ்வியைதபெருநான்கெல்லையிற்பட்ட பூமிகாராண்மைமியாட்சி-(3) உள்ளடங்க மேலெங்குாவாற்குடுக்கப்பட்டபரிசேய் எம்மாலுங்கொடுக்-(4) கப்பட்டது, மற்றிதற்காணத்திருற்றமின்றிக்கூறுங்காலைக், கொங்காவந்ந-(5) றுங்கண்ணிக் ஶ்ரீமாராஜநது கூந்யாணத்ம், கொங்கர்கோற்குக்குனைத்துகொடுப்ப, ஆர்ப்-(6) பரு அடற்றானைப் வடிவல்ராஜர் புகன்றெழுந்து, வில்விரவுங்கடற்றானை கூஹனை-(7) வெண்பைவாய், ஆளமருள்ளழிந்தோடவாளமருளுடன்வவ்விய, எனப்பொறி-(8) இகலமருளிடிஉருமென வலனேந்திமானத்தானை, ஶ்ரீவீகுஅன்மன்னர்கோ-(9) னருளிற்பெற்றுங், கோல்வளைக்கும்வேற்றானைப்பல்வளைக்கோன்கு-ணாா-

ஏடு ix. பக். 1.

(1) ப்பட்டும், பொாவந்தவர் மதந்தவிர்க்குங் காவந்தபுரத்தவர்கு[ல]த்தோன்றல், மாவேந்-(2) துங்கடற்றானைமூவேந்தமங்கலப்போரையனுகிய, வெதகுஸிவாணி மா-றங்கா-(3) ரி-இப்பிரமதேயமுடையகொற்கைகிழான்காமக்காணிசுவரஞ்சிங்கன், இ-(4)நனுள்மூன்றிலொன்றுந்தனக்குவைத்திரண்டுகூறும் ஒம்பதின்மர்வேஹணை (5) ர்க்குநீரோடட்டிக்கொடுத்தான், இதனுள் மூர்த்திஎபினஞ்சவைஓடொ-(6) த்நது நான்கனாப்

படாகாரமுடையவன், இதனுட்டனக்குவைத்த ஒருகூற்றிலு-(7)ந் தம்பிமார்க்குநான்குந் தஞ்சிற்றப்பனார்மக்களுக்குஆறும்ஸபை(8)யொடொத்த படாகாரங்கொடுத்தான். இப் ப்ரஶஸ்தி பாடின சேனாப-(9)தி ஏனாதி ஆயின சாத்தஞ்சாத்தற்கு மூன்றுகூற்றுகுமாய்த்-(10)தங்களோடொத்த நான்கு படாகாரங்கொடுத்தார்.-|||-

### ஏடு ix. பக். 2.

(க) [illegible] (உ) [illegible] (ங) [illegible] (ச) [illegible] (ரு) [illegible] (சா) [illegible] (எ) [illegible]

### ஏடு x. பக்-1.

(1) [illegible] (2) [illegible] ||| [illegible] (3) பற்றிணைக்காத்தார்மலரடிஎன்முடிமேல் என்று கொற்றவனேய்பணி-(4)த்தருளித்தெற்றெனத் தாம்ரஶாஸனஞ்செய்வித்தான்--|||-இஃதெழுதி-(5)ன சுத்தகேசரிப்பெரும்பணை காரனுக்கு பெருமக்கள் அருளாற்பெற்ற-(6)து ஒரு இல்லவளாவும் இரண்டுமாச்செய் உ-ம் ஒரு புன்செய் உ-(7)ம் பெற்றான், இவை [illegible]கேஸரிப் பெரும்பணைகானெழுத்து.

ஸ்ரீ:

# மனோன்மணீயம்.

(இரண்டாம்பதிப்பு.)

இது, திருவநந்தபுரம் மஹாராஜாகலாசாலையில், தத்துவசாஸ்திர போதகாசிரியராயிருந்த ராவ்பஹதூர் P. சுந்தரம்பிள்ளை M.A., அவர்களால் இயற்றப்பட்டுப் பிரஸித்தியடைந்ததொரு நவீன நாடகம். இதன்பகுதிகள் சென்னைச்சருவகலாசங்கத்தாரால் யப். ஏ. வகுப்புக்குப் பாடமாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்புத்தகத்துக்கு, இப்பொழுது திருவநந்தபுரம் உயர்தர நீதிமன்றத்தில் நியாயாதிபதியாயிருக்கும் ஸ்ரீமத் K. G. சேஷையரவர்களால் முன்னமே ஆராய்ச்சியுரை யொன்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பல சிறந்த அறிஞர்களால் இப்புத்தகம் நன்குமதிக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் முதற்பதிப்பாய் வெளிவந்தபிறகுதான் ஆங்கிலம்வல்லதமிழ்மக்கள்பலரும் தமிழ் ஒரு தனித்தலைமொழி என்று மதிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இதனையியற்றிய பிள்ளையவர்களது கல்வித்திறமையும், ஆற்றலும், அறிவுடைமையும் அறியாதவர்களில்லை. பிள்ளையவர்கள் நீண்டகாலம் நில்லாதுசெல்லினும் அவர்தம் புகழினை ஈண்டு நீண்டிருத்தவேண்டி இப்புத்தகத்தினை இரண்டாமுறை பதிப்பித்துதவிய திருவநந்தபுரம் ஹைக்கோர்ட்டுவக்கீல் ஸ்ரீமத் S. வையாபுரிப்பிள்ளை, B.A., B.L., அவர்களது தமிழறிவுடைமையும் தமிழபிமானமும் பாராட்டத்தக்கன. வேண்டுவோர் ஸ்ரீமத்-S. வையாபுரிப்பிள்ளையவர்கட் கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

## பிழைதிருத்தம்.

செந்தமிழ்த்தொகுதி உ௰-பகுதி ச-ல் (துர்மதி-ஹூ மாசிப்பகுதியில்) கடுஙு-ஆம்பக்கத்து உடு-ஆம்வரியில் வடமொழியிலக்கியவன்மையை என்றிருப்பதை அம்மொழியிலக்கியவன்மையை என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

# கீதாஞ்சலி.

## விருத்தம்.

அந்தமுறாதெனைப்படைத்தாயருட்சித்தத்தால்
அழியுமிந்தப்பொய்யுடலாங்கலத்தினாரும்
பந்தமுறுமலப்பெருக்கைப்புறத்தேயூற்றிப்
பதிஞானம்புத்தாவியெனவுள்ளேற்றிச்
சந்தமுறுஞ்சிறியபைம்புற்குழல்போலென்னைத்
தரணியிடைகீழ்மேலாந்தலங்கண்மூற்றும்
சொந்தமுறநடத்திநித்யபேரானந்தச்
சுருதியமுதூட்டினாய்த்துதிக்கமாதோ. (1)

என்றுமருட்சக்திநிறைதிருக்கையேதை
இதயமதிற்படக்கரையிலின்பந்தேங்கி
நன்றுபொலிந்திசைமேவிநாவால்நாயேன்
நவிலறியாஞானமதைநவிலச்செய்தே
குன்றனையகொடைபொழிந்துசிறியேன்புன்கை
கொள்ளக்கொள்ளவேவற்றாதுகொடுத்துமுன்னே
சென்றபலவூழிசெலவின்னுஞ்செல்லும்
சேணூழிவரையுமெனைக்காக்குந்தேவே. (2)

அடியேனைப்பாடெனநீயழைக்கும்போதென்
அகங்குழைந்துகளிப்பினிருவிழியாறுகும்
படியேயென்முகந்தோயப்பவத்தென்காணாப்
பங்கயமாந்திருமுகத்தைப்பார்த்துப்பார்த்து
மிடிசேரென்னிசையில்லாவாழ்வைவெள்ளி
விழுமியசீரொழுகுபரவாழ்வைவேண்டிப்
படிதோயுங்கடல்கடந்துகுடம்பைநோக்கும்
பைம்புள்ளெனவீடிறைஞ்சிப்பாடுவேனே. (3)

ஐயனேநின்சமுகமடையவேண்டின்
அன்புருகும்பாவின்றிவழியுமுண்டோ
கையனேனாயினும்நான்பாடப்பாடக்
கசிந்துநீயிரங்கொள்ளுங்கனிவுகண்டே

துய்யபாச்சிறைவிரித்துப்பறந்தேயெட்டாத்
துரியாதீதத்தடிகள்தொட்டேனப்பால்
மெய்யெலாமயர்ந்தென்னைமறந்தின்பாழ்ந்து
விண்ணவநீதோழனென்றேன்தலைவநீயே. (4)

என்னையிங்காண்டடிமைகொண்டோனிசைக்குநாதம்
இதம்வியந்துமெய்மறந்துகேட்பதல்லாற்
பின்னையானதிதெனவேபேசக்கல்லேன்
பேருலகைத்தாங்குமொலியதுவேயாகி
மன்னியவானிடைமருவிப்பரந்துசென்று
மலையனையதடையெல்லாமறுத்துப்பாய்ந்தே
துன்னுபரஞ்சோதிநிகர்வாழ்வைநல்கும்
தோமிறுய்யவொலியாகித்துலங்குமாதோ. (5)

பண்ணார்ந்தமொழிகொடுநீபாடும்வண்ணம்
பண்பிலேனிதங்கூர்ந்தங்கிசைந்துபாட
விண்ணார்ந்தநாதமிகவேண்டினேன்யான்
வேண்டினுமென்பாக்கள்வெறுஞ்சொல்லாய்நாயேன்
உண்ணார்ந்தவேட்கைமுற்றுந்தணிந்ததின்றால்
உளறினெனலறினேனுள்ளநொந்தே
அண்ணார்ந்துகூப்பிட்டேனழியாதுந்தன்
அமிர்தமார்நாதவலையகப்பட்டேனே. (6)

வேறு,

என்னுயிர்க்குயிரேயீசாவியங்குமென்னுடலத்தெங்கும்
மன்னுசிற்சக்தியாய்நீவாழ்வினைவழங்கலாலே
புன்மையவழுக்குநீக்கிப்புனிதமார்புரையில்தேகம்
தன்னைநீகாணவென்றுந்தமியனேன்முயல்வனன்றே. (7)

உள்ளுறுமிதயந்தன்னில்உளதிலதறிந்தேயுண்மை
தெள்ளுறுமொளியைநாட்டுஞ்சிறந்தொளிநீயேயானால்
கள்ளுறுதீயவெல்லாம்கடிந்தென்றன்கருத்திற்பொய்ம்மை
கொள்ளுறுவண்ணம்நிற்கக்குறித்தியான்முயல்வனன்றே. (8)

ஏற்றங்கொளென்னுள்ளத்திலிலங்கிநீகோயில்கொண்ட
ஆற்றினைமதித்தாங்குள்ளவழுக்கழித்தன்புசார்த்தித்
தேற்றங்கொள்குணங்கள்பூக்கத்தேவினைநடுவிலேற்றும்
மாற்றரும்பெருமைவாழ்த்திவரநிதமுயல்வனன்றே. (9)

செய்புமென்செய்கையாவுஞ்சிறந்திடச்செய்யும்சக்தி
ஐயநின்னுடையதென்னுமறிவினையறிந்துநாளும்
உய்யுமாறடியேன்ஞாலத்துவந்திடுவாழ்வில்மேலோன்
பெய்யுநற்கருணைதோன்றப்பெரிதியான்முயல்வனன்றே. (10)

வேறு.

பக்கமதிலோர்நொடியேனும்பாவியிருக்கும்பரிசுற்றால்
வைக்குநினைவுவேறென்றில்வருமோவளருந்தொழிலெல்லாம்
தொக்கபின்னர்வைத்தேயான்சோர்வில்லாமற்றொழுதாறி
மிக்ககருணைமுதற்பெற்றேவிஞ்சும்தொழில்கள்புரிவேனே. (11)

என்றுன்னொளிசேர்முகங்காணாதிருந்தேனோவென்னிறைவாகேள்
அன்றென்னுள்ளத்தாறவிலாதவியாக்கவலைக்காளாகித்
துன்றும்வெள்ளத்தனைபவினைதொலையாக்கரையில்கடல்மூழ்கி
நின்றுததும்பிச்செயுஞ்செயல்கள்நேராய்முடியாதலைவேனே. (12)

விரும்பும்வேனிற்பிறந்தக்கால்வெயில்தோய்என்பல்கணிவாயிற்
சுரும்பின்கீதத்தொனிகேட்கும்துணர்கொண்மலர்க்காநிழல்குறுகி
அரும்புங்கவலையிலாதெங்கும்ஆனந்தம்பொழியவ்வேளை
கரும்பிற்கினியமுகங்கண்டென்கடவுட்கென்னைப்படைப்பேனே. ()

வேறு.

வாடியவென்னிதயமலர்மண்மடிமேல்விழாமுன்
தேடியநீயதைப்பறிப்பின்செங்கைக்குநோவுமுண்டோ
சூடியவுன்மாலைதனிற்றொங்குமிடனின்றெனினும்
நாடியவுன்காப்பரிசநாயேற்குப்போதாதோ. (14)

கங்குல்பகலாயடியேன்காத்திருந்துன்கமலபதம்
தங்கியேயிதம்பூக்கச்சாலவுமே அருச்சித்தேன்
பொங்குசிறப்பூவழகும்பொலிமணமுமிலதேனும்
அங்கதனையேபணிதல்ஆகாதோஆள்வோனே. (15)

R. R. குணரத்நம் B.A.,

எ-து, தமக்குத் தொழில்செய்வார்பலராலுங் களவுகாணப்படினும், பொருள்வருவாயான்மிக்கார் செல்வங்குறைந்து வருந்தார்; விளைந்தநெல்லையே யறுக்கப்புகுவார் நீர்வடிய அணையைத்திறக்குமூரனே! நரிநக்கிற்றென்று கடனீர் அறுமோ அதுபோல என்றவாறு.

(குறிப்பு) இது, பெருஞ்செல்வமுடையோர் தம் களமர்கொள்ளும் சிறுகளவை உபேக்ஷித்திருக்கவேண்டுமென்கிறது. களமர்-பொருளீட்டும்வினைக்களத்துக்குரியோர். 'விளைந்தநெல்லையே அறுக்கப்புகுவார்' என்றது அவர் தீசாவியறுத்தறியாத விளைவின்சிறப்புணர்த்தியவாறு. நீர்வடிய அணைபைத்திறத்தலாவது நெற்கதிராறுத்தற்கு வயலுலரவேண்டிக் காவில் நீர்வராதிருக்கும்படி ஆற்றிலணையைத்திறந்து நீர்வடிப்பது. நரிநக்கிற் கடல்குறையுமா என்பது இதன் பழமொழி. இதனை, இனம்பற்றி, "ஓசைபெற்றுயர்பாற்கடலுற்றொரு—பூசைமுற்றவுநக்குபுக்கென"* என்றார் கம்பநாடர். இது, ஒப்புமைபற்றி ஈக்குடித் தேருமைப்பால்குறையுமா என நாட்டுவழக்கில், களமர்சிறுகளவு உபேக்ஷிக்கத்தக்கதென்னுங் குறிப்பில் வழங்கப்படுகிறது.

178. ஆண்டகை மன்னரைச் சேர்ந்தா ரலலுறினு
மாண்டொன் றும் வேண்டுது மென்ப துரையற்க
பூண்டாங்கு மார்ப பொருடக்கார் வேண்டாமை
வேண்டிய தெல்லாந் தரும்.

எ-து. ஆண்டகைமையையுடைய அரசரைச் சேர்ந்தொழுகுவார் தாம் வறுமையால் அல்லலுற்றாராயினும் அவர்மாட் டொன்றனைவேண்டுவோமென்பதனை மனத்தால் நினையாதொழிக; பூண்டாங்கு மார்பனே! பிறரான்மதிக்கப்படுவார் ஒன்றனை வேண்டாதொழுகுதல் தாம் வேண்டியபொருளெல்லாவற்றையுந்தரும் என்றவாறு.

(குறிப்பு) இது, மன்னரைச் சேர்ந்தொழுகுமாறு கூறுகிறது. ஆண்டகைமை - ஆளுந்தன்மை. உரையற்கவெனக் காரணத்தைக் காரியமாக்கிக்கூறினர். அதனால் வாயாலுரைத்தலும் கூடாதாயிற்று. தக்கார் பொருள்வேண்டாமை எனக் கூட்டுக. 'ஒன்றனை' என்றது தமக்கின்றியமையாதபொருள்களுள்ளும் ஒன்றையும் என்றவாறு. வேண்டாதொழுகுதல் - தாம் விரும்பாதொழுகுதல் 'வேண்டியபொருளெல்லா

* கம்பராமாயணம், அவையடக்கம்.

வற்றையும் தரும்' என்றது விரும்புதற்குரியபொருளெல்லாவற்றையுந் தரும் என்றவாறு. வேண்டாமையானது வேண்டியபொருளெல்லா மடைந்திருந்தாற்போலும் மனநிறைவைப் பயத்தலானும், இவர் தமக்கு வேண்டியவற்றை விரும்பிக்கேளாரெனநினைந்து, அரசர் தாமே அவர் வேண்டுதற்குரியபொருள்களையளித்துப் பெருமையெய்துவராதலானும் அவ்வேண்டாமையே வேண்டியதெல்லாந்தருமென விரித்துரைத்துக் கொள்க. வேண்டாமை வேண்டியதெல்லாந்தரும் என்பது இதன் பழமொழி. இது, "வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை"* எனவும், "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது, வேண்டாமை வேண்ட வரும்"† எனவும் பொருள்பற்றி வழங்கப்பட்டது.

179. யாவரே யானு மிழந்த பொருளுடையார்
தேவரே யாயினுந் தீங்கோர்ப்பர்—பாவை
படத்தோன்று நல்லாய் நெடுவேல் கெடுத்தான்
குடத்துள்ளு நாடி விடும்.

எ - து, கெடுத்ததொருபொருளையுடையார் எல்லாஅறிவினையுமுடைய ராயினும், தேவர்களையாயினும் தீங்குசெய்தாராக மனத்தின்கட் கருதுவர்; சித்திரப்பாவையின்றன்மையுளதாகத்தோன்றும் வடிவையுடையநல்லாய்! நெடு வேலைக்கெடுத்தவன் குடத்துள்ளேயுநாடுமாதலாற் றம்மை யயிர்த்தானென்று அவனைக் குற்றங்கொளப்படா தென்றவாறு.

(குறிப்பு) இது, பொருள்கெடுத்தோரால், கவர்தல்பற்றி ஐயுறப் பட்டார் பொறுத்துக்கொள்ளவேண்டுமென்கிறது. 'இழந்த பொருளுடை யார்யாவரேயாயினும்' எனக் கூட்டுக. கெடுத்தபொருள்—களவு முத லியவற்றாற் காணுதொழிந்தபொருள். "இழந்தபொருளுடையார்" என் றது ஒருபொருளிழத்தலையுடையார் என்றவாறு. 'எல்லாவறிவினையு முடையாராயினும்' என்றது தேவரிடத்துத்தீங்குணர்தற்குத்தடையான காட்சி, அநுமிதி, சாத்தம் என்னும் உண்மையறிவுகளையெல்லாமுடைய ராயினும் என்றபடி. இதனால் இவ்வறிவிலாதார் ஐயுறுதலைப்பொறுத் துக்கொள்ளவேண்டுமென்பது சொல்லவேண்டாதாயிற்று. 'தேவர்களை யாயினும்' என்றது ஏனையோரையெல்லாம் அகப்படுத்திக்கூறியவாறு.

---

* திருக்குறள் 37-ஆம் அதிகாரம் அவாவறுத்தல்—3.
† ௸ ௸ ௸ ௸ 2.

'தீங்குசெய்தாராக' என்றது களவுசெய்தாராக என்றவாறு. 'நெடுவேல் கெடுத்தவன்'—நெடியவேலாயுதத்தை வைத்தவிடமறந்து கெட்டுப்போக விட்டவன். 'குடத்துள்ளேயும்' என்றது அவ்வேல் புகுந்து மறைந்திருத்தற்கு இடம்பற்றாத குடத்தின்கண்ணேயும் என்றவாறு. இது அதிசயோக்தியாய்க் கெடுபொருளிருத்தற்குரித்தாகாத இடத்தையும் தேடுவனென்னும் பொருளுணர நின்றது. இதனையே பிறிதோராற்றால் "ஒருவனவன் யானைகெடக் குடத்துட்செங்கை யோட்டுதல்போல்" * என வழங்குவர். 'நாடும்' என்றது தான் சேமித்துவைத்திருக்கக்கூடுமென்று தன்னையும் ஐயுற்றாராயும் என்றவாறு. இதனாற் பிறரை ஐயுறுதலும் பிற இடங்களை ஐயுறுதலும் சொல்லவேண்டாவாயின.

180. வெள்ளமாண் பெல்லா முடைய தமரிருப்ப
வுள்ளமாண் பில்லா வொருவரைத்—தெள்ளி
மறைக்கட் பிரித்தவரை மாற்று தொழிதல்
பறைக்கட் கடிப்பிடு மாறு.

எ - து, வெள்ளம்போல அளத்தற்கரிய மாண்டகுணமெல்லாமுடைய தமர் அவ்விடத்திருப்பக் கொண்டு உளத்தின்கண் மாட்சியில்லாத வொருவரை ஆராய்ந்து சூழ்ச்சிக்கணீக்கி அவரை மாற்றுதொழிதல் பறையின்கட் கடிப்பிட்டெறிதலோடொக்கும் என்றவாறு.

(குறிப்பு) இது, மனநலமில்லாதவரோடு மந்தணமுரைக்கலாகாதென்கிறது. வெள்ளமென்பது மிகப்பெரியதோரெண்ணுக்குப் பெயராதலால் அது ஈங்கு அளத்தற்கருமை குறித்துநின்றது. மாண்ட—மாட்சிமையுடைய. குணம்—நற்குணங்கள். தமர்—தமக்குரியர்; குணங்களாலும் உரிமையாலும் நன்மைபயப்பனசெய்பக்கருதுவோர் என்பது குறிப்பு. 'இருப்பக்கொண்டு' என்றது இருப்பக்கொள்ளவேண்டுமென்னும் உடம்பாட்டளவாய்நின்று 'நீக்கி' என்னும் வினையெச்சவினைகொண்டது. 'ஒருவரை' என்றது சிலரை என்றபடி; இது, ஒருவரையுணர்த்தும் ஏகசத்தத்தாற் சிலரை வழங்கும் வடமொழிமுறைபற்றிவந்தது. இதனை ஒருசிலர் என்பதனுள் ஒருமை சின்மையுணர்த்தச் சிற்சிலர் என்னும் பொருள்தோன்றுதலானும் அறிக. சூழ்ச்சிக்கண் நீக்குதலாவது சூழ்ச்சிசெய்வாரிடைச் சேர்க்காது விலக்குதல். மாற்றுதலாவது

---

* தாயுமானவர்பாடல், ஆகாரபுவனம், சிதம்பரகவியம், செய்—29.

பிறிதொருபுறத்தொழிலில்வைத்தல்; இதனால் அவரைப் புறத்தொழிலில் வைத்துக்கொள்ளாது உடனே அகற்றுவதும் தீங்குபயக்குமெனபது குறிக்கப்பட்டது. 'பறையின்கட்கடிப்பிட்டெறிதலோடொக்கும்' என்றது ஒருசெய்தியைப் பகிரங்கப்படுத்தக்கருதுவோர் பறையின்கட் கடிப்பிட்டெறிந்து அச்செய்தியைச்சொல்லி யாவரும் அறியச்செய்வதுபோல அவரும் அச்சூழ்ச்சியைப் பிறர் அறியச்செய்வ ரென்றபடி. கடிப்பு—குறுந்தடி. எறிதல்—அடித்தல். இக்கருத்து, "அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட—மறைபிறர்க் குய்த்துரைக்க லான்"* எனக் குறளுள்ளும் கொள்ளப்பட்டது. பலரு மறியச்செய்ததாகும் என்னும் பொருளிற் 'பறையடித்ததுபோலும்' எனவழங்கும் குறிப்புமொழியே இங்கெடுத்துக்கொண்ட பழமொழியாயிற்று.

181. வெற்றிவேல் வேந்தன் வியங்கொண்டால் யாமொன்றும்
பெற்றிலே மென்பது பேதைமையே—மற்றதனை
யெவ்வ மிலராகிச் செய்க வதுவன்றே
செய்கென்றா னுண்கென்னு மாறு.

எ-து, வென்றியையுடையவேல்வேந்தன் ஒன்றனைச்செய்கவென் றேவல் கொண்டால், யாம் ஒன்றும்பெற்றிலேமென்றுமறுத்தல் ஒருவர்க்கறியாமையே யாம்; அவரேவியகருமத்தைத் துன்பமிலராகிச் செய்க; ஒரு கருமத்தைச் செய்கவென்றவ னுண்கவென்னுமாறன்றே அது என்றவாறு.

(குறிப்பு) இது, பயனடைதலி லேயப்பாடின்றியே வினைவிழைவோர் அரசனேவிபனபுரியவேண்டு மென்கிறது. 'வென்றியையுடைய வேல்வேந்தன்' என்றது அவனுடைய ஆக்கமிகுதியுணர்த்தியவாறு. 'ஒன்றனை, என்றது செய்தற்கேவுங்காரியத்தின் நியமமின்மைகூறியவாறு. 'செய்க' என்றது உயர்ந்தோர் இழிந்தோர் எல்லோருமகப்படக் கூறியவாறு. 'ஏவல்கொண்டால்' என்றது அவ்வேவலின் கிடைத்தற் கருமைகாட்டியவாறு. 'யாம்' 'பெற்றிலேம்' என்பன அவ்விருவகையோரு மகப்படக்கூறு மதாரணத்தில்வந்த தன்மையொருமைப்பன்மை. 'ஒருவர்' என்றது அவ்விருவகையோரு மகப்படவந்த படர்க்கையொருமைப் பன்மை. 'யாம் ஒன்றும்பெற்றிலேமென்று மறுத்தல்' என்றது முன் செய்துபோந்த செயல்களுக்கே பயன்பெறாதிருப்பினும், அதனை எது

---

* திருக்குறள் 108-ஆம் அதிகாரம் கயமை—6.

வாகக்கொண்டு மறுத்துரைத்தல் என்றவாறு. மறுத்தல் அறியாமை எனக் காரியம் காரணமாயுபசரிக்கப்பட்டது. "செய்கென்றானுண் கென்னுமாறு" என்றது செய்யச்சொனனது உண்ணச்சொன்னது எனப் பயனில் தெளிவுபற்றிவழங்கும் பழமொழிக்கூற்று. 'செய்க என்றவன் உண்க என்னுமாறு' என்றது செய்கவென்றேவினவன், செய்வோனே அக் கருமப்பயன்பெற்றுண்க என்று ஏவியதாமெனக் காரிய காரணவொற்றுமையால் வினைப்பயன் தவறுதடைவிப்பன் என்பது குறித்துநின்றது. அது என்றது வியங்கோடலைச் சுட்டிநின்றது.

182. கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரைப்
பழித்துப் பலர்நடுவட் சொல்லாடா ரென்கொல்
விழித்தலரு நெய்தற் றுறைவ வுரையா
ரிழித்தக்க காணிற் கனா.

எ-து, ஆராய்ந்து தம்மாற்கொள்ளப்பட்ட நண்பினையுடையாரைப் பலர் முன்னே பழித்துச் சொல்லாடலாகாது; அது என்னைகாரணமென்னின், விழித்தாற்போல அலராநின்ற நெய்தற்றுறைவனே! பிறர்க்குரைக்கத்தகாதிழிக்கத்தக்கனவற்றைக் கனவின்கட்காணின் அவற்றைப் பிறர்க்குரையாதது போல என்றவாறு.

(குறிப்பு) இது, நட்பாளரைப் பழிதூற்றலாகாதென்கிறது. 'ஆராய்ந்து தம்மாற்கொள்ளப்பட்ட நண்பினையுடையா'ர் என்றது, ஒருவரது குணதோஷங்களையாராயாது நண்புகொள்ளலாகாது; ஆராய்ந்தே கொள்ளவேண்டும், எனனும் நியமமுடைமையால் நண்புகொள்ளுமுன்னமே தாம் ஆராய்ந்திருக்கவேண்டும் என்பதும், அவரிடைப் பழியுளதாயின் அது தம்மாலறியப்பட்டே அதற் குடம்பட்டுக்கொள்ளப்பட்டமையால் அவர் தம்மாற் பழித்துரைக்கற்பாலரல்லர் என்பதும் அறிதற்குவேதுவாதலிய கருத்துடையடையாய் நின்றது. 'பலர்முன்னே' என்றது பிறர்முன்னே என்றபடி. இதனால் அவர் தனித்திருக்குமிடத் தவர் பழியெடுத்திடித்துரைத் தொழிப்பிப்பது தவறுகாதென்பது குறிப்பாயிற்று. 'அது' என்றது பிறர்முன் பழித்துரையாடாமையைச் சுட்டிநின்றது. 'என்னைகாரண'மென்றது எவ்வாறென்னும்பொருளுணாநின்றது. 'விழித்தலர்தல்' என்பது படுத்துக்கிடத்தல் என்பதுபோல் ஒருசொல்லாய் நெய்தற்கு அடையாயிற்று. 'பிறர்க்குரைக்கத்தகா'தென்றது அசப்பியமாயென்றபடி. 'இழிக்கத்தக்கன' வென்றது

உரைப்பாரைக் கேட்போ ரிழிக்கத்தக்கன என்றவாறு. 'கனவின்கட் காணின்' என்றது கனவின்கட்கண்டாலும் என்றவாறு. இதன்பழமொழி இடக்கர்ச்சொல்லடியாய் இழிசனர்வழக்கில் முன்னிலையாக வழங்குவ தொன்றை இடக்கரடக்கிப் படர்க்கையினமைத்துக்காட்டப்பட்டது.

183. வளமையுந் தேசும் வலியும் வனப்பு
மிளமையு மிற்பிறப்பு மெல்லா—முளவா
மதித்தஞ்சி மாறுமஃ தின்மையாற் கூற்றங்
குதித்துய்ந் தறிவாரோ வில்.

எ - து, செல்வமும் விளக்கமும் வலியும் அழகும் இளமையும் குடிப்பிறப்பும் என்றிவையெல்லாம் ஒருவற்குக் கூடவுளவாயினும், அவற்றைமதித் தஞ்சி நீங்குஞ்செய்கை அக்கூற்றிற்கின்மையால் அக்கூற்றைக்கடந்து பிழைத்தறிவாரில்லை என்றவாறு.

(குறிப்பு) இது, உயிர்வாழ்க்கை நிலையுடையதென்றெண்ணியிருக்கலாகாதென்கிறது. விளக்கம்—பிரசித்தி. "எல்லாம்" என்றது இவற்றுள் ஒரொன்றுடையாரயினும் அவர்க்கு வன்கண்ணரும் தீங்கிழையாது மதித்து அஞ்சி மாறுதல் வழக்காறுகவும், கூற்றுக்கு அது சிறிதுமில்லையென அதன்கொடுமைதோன்றக்கூறியவாறு. "கூற்றங்குதித்துய்ந்தறிவாரோவில்" என்றது பழமொழிக்கூற்று. இது இங்கு உயிர்வாழ்க்கை நிலையுடையதென்றெண்ணியிருக்கலாகாதென்னும் எச்சப்பொருளை முடித்தற்கு ஏதுவாசகமாயிற்று. 'சாகாதிருப்பாரொருவருமில்லை' எனச் சாதாரணவழக்கில் வழங்குந்தொடர்மொழியே இதன் பழமொழியெனக்கொள்க. இது, "கூற்றங்குதித்துய்ந்தாரீங்கில்லை" என நாலடியுள்ளும் * வழங்கப்பட்டது

184. பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கு—நல்லாய்
மணலுண் முழுகி மறைந்து கிடக்குந்
துணலுந்தன் வாயாற் கெடும்.

எ - து, நன்மையில்லாதனவற்றைப் பிறரைச்சொல்லிக் கரந்தொழுகும் பேதை தான்சொல்லுஞ்சொல்லாலே தன்னைத் துயரின்கண் அகப்படுக்கும்; நல்லாய்! மணலினுள்ளேமுழுகியே ஒளித்துறையும் துணலும், தன் குரலைக் காட்டித் தன் வாயாலே தன்னைத்தின்பார்க்கு அகப்படுமதுபோலுமென்றவாறு.

* செல்வநிலையாமை செய்யுள்—6.

(குறிப்பு) இது, நாவடக்கமுடையாராயிருக்கவேண்டுமென்கிறது. நன்மையில்லாதன-பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் என இவை. மறைந்தொழுகுதலாவது தான் அச்சொல்லொன்றும் சொல்லாதான்போன்றுநடித்தல். 'தான்சொல்லுஞ் சொல்லாலே தன்னைத் துயரின்கண் அகப்படுக்கும்' என்றது தான் துயரிடைப்படுதற்குப் பிறிதொரு கருவியும் கருத்தாவும் கருமமும் வேண்டாது, தான்சொல்லுதலாகிய அச்செயலே கருவியும், சொல்லும்வினைமுதலாகியதானே கருத்தாவுமாய்த் துயரிடைப்படுத்தற்குத் தன்னையே கருமமுமாக்கிக்கொள்ளுவனென அப்பேதையின் அறியாமையைபெடுத்துக்காட்டுவார்போன்று அநிஷ்டபலஸித்தி கூறியவாறு. பின்னடி இரண்டும் பழமொழிக்கூற்று. தவளை தன் வாயாலே கெட்டது என்பது இதன் பழமொழி.

185. அகத்தா லழிவு பெரிதாயக் கண்ணும்
புறத்தாற் பொலிவுறல் வேண்டு—மெனைத்தும்
படுக்கை யிலராயக் கண்ணு முடுத்தாரை
யுண்டி வினவுவா ரில்.

எ - து, தம் மனையினுள்ளவறுமை பெரிதாயினவிடத்தும் புறத்தார் காணத் தம்முடையமேனி பொலிவுபெற்றிருத்தலைச் செய்யவேண்டும்; எப்படியாயினும் பாயலுட்படுக்குமாடையிலராகியவிடத்தும் உடுத்தவுடையாற்பொலிந்தாரை யுண்டிவினவுவாரில்லையாதலானென்றவாறு.

(குறிப்பு) இது, குடிமையுடையார் தம் தோற்றப்பொலிவு குறைதலாகாதென்கிறது. இங்கு "அகம்" என்பது மனையையுணர்த்தினமையால் இந்நெறி குடிமையுடையார்க் குரியதாயிற்று. அழிவு—அழிதற்குக் காரணமாகிய வறுமை. "புறத்தால்" என்றது வெளிப்படையாக என்னும் பொருளுணர்த்துதலாற் 'புறத்தார்காண' எனப் போந்த பொருளுரைக்கப்பட்டது. "எனைத்தும்" என்றது எனைத்தாயினும் என்றவாறு. எனைத்தும் பொலிவுறல்வேண்டுமெனக் கூட்டுக. "படுக்கையிலராயக்கண்ணும்" என்றது வறுமைமிகுதி காட்டியவாறு. 'பாயலுட்படுக்குமாடை' என்றது பாயுள்விரிக்கும் மூன்றூந்துணியை. 'உண்டிவினவுவாரில்லை' என்றது அறச்சூழ்ச்சாலையில் அன்னமுண்ணாற்கழைக்கப்படும் வறியராகக்கருதாது குடிமையுடையரென நன்குமதிக்கப்படுவர் என்றவாறு. வறியோரைக் 'கஞ்சித்தொட்டிகள்' என இக்காலத்தார் வழங்கும் வழக்குண்மையும் இங்கு நோக்கத்தக்கது.

186. கற்றதொன் றின்றி விடினுங் கருமத்தை
யற்ற முடிப்பா னறிவுடையா—னுற்றிபம்பு
நீத்தநீர்ச் சேர்ப்ப விளையானே யாயினு
மூத்தானே யாடு மகன்.

எ - து, காலநிகழ்ச்சியுந், தேசநிகழ்ச்சியுமுதலாயினவறியத்தக்கநூல் களைக்கற்குந்தன்மையொனறின்றிபிருந்தானுயினும், மடியின்றி யெக்காலமுங் காரியத்தின்கண்ணேமுயலுவான் கருமத்தைக் குறையறவே முடிப்பானுமி யுற்றுச்சொல்லாநிற்பன்; பிரளயகாலம்போலப் பரக்கும் நீரையுடையசேர்ப் பனே! இளையனேயாயினும் ஆடுமகன் மூப்பனுயினுற்போல வென்றவாறு.

அஃது கல்விவேறு கருமச்சூழ்ச்சி வேறு; இளையனுயினும் மூத்தான் மடி யின்றிக் காரியத்தின்கண்முயல்வானென்றமாம்.

(குறிப்பு) இது, கலைவன்மையினும் காரியவன்மை மேலானதென் கிறது. காலநிகழ்ச்சி — அவ்வக்காலங்களில் வழங்கிய வழக்கங்கள். தேசநிகழ்ச்சி—தேசாசாரங்கள். 'முதலாயின' என்றது சாதிவழக்கம் குலவழக்கம் முதலியவற்றை. அவற்றையறியத்தக்கநூல்களாவன இதி காசங்களும் அரசியனீதிநூல்களும் முதலியன. 'கற்குந்தன்மையொன் றின்றி' என்றது அத்தன்மை வழக்குரைப்பானுக்கு இன்றியமையாத தென்பதுபட நின்றது. "அறிவுடையான்" என்றது இங்குக் காரிய வுணர்ச்சியுடையானையாதலால் உபசாரவழக்காய் 'மடியின்றி எக்காலத் தும் காரியத்தின்கண்ணேமுயலுவான்' எனப் பொருள்விரித் துரைக்கப் பட்டது. அறவென்பது எதுகைநோக்கி "அற்ற" வென விரிக்கப் பட்டது. 'உற்றுச்சொல்லாநிற்பன்' என்றது அக்காரியப்பயிற்சியில் லாத கல்வியறிவுடையான்சொல்லும் மறுதலைவழக்கைத் தாக்கிப்பேசு வன் என்றவாறு. 'இளையனேயாயினும்' என்றது ஒருவீட்டில் உடன் பிறந்தாருள் வயதாற்சிறியனுயிருப்பினும் என்றவாறு. ஆடுமகன்— தன்வழக்கைப்பிறரறியப் பேசவல்லபிள்ளை. 'மூப்பனுயினுற்போல' என்றது அவ்வீட்டு முதல்வனக மதிக்கப்படுதல்போல என்றவாறு. இங்கு இளமை கல்வியறிவின்மைக்கு உவமையாயிற்று. 'கல்விவேறு; கருமச்சூழ்ச்சிவேறு' என்றது கல்வியானும் உயர்வுவேறு; கருமச்சூழ்ச்சி யானும் உயர்வுவேறு; ஆதலாற் கருமச்சூழ்ச்சியுட்குறையுளதாகில் அதனைக் கல்வியுயர்வுகொண்டுநிரப்புதல் கூடாதென்றவாறு. மடியின் றிக் காரியத்தின்கண்முயல்வான் இளையனுயினும் மூத்தான் எனக் கூட்டுக. 'மூத்தான்' என்றது குறிப்புவினைமுற்று.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1922-௵ ஜனவரிமாத வரவு செலவு கணக்கு.

| விவரம். | வரவு 1922 ஜனவரி | | | 1921 ஜனவரி | | |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: | | | | | | |
| (1) Donations, Contributions வகையில் வரவு ... | 100 | ... | ... | | | |
| (2) சங்கப்பரீக்ஷைக் கட்டணத்தொகை வரவு ... | 108 | 10 | ... | | | |
| (3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள்விற்றவகையில் வரவு. ... | 68 | 7 | ... | | | |
| (4) Miscellaneous வரவு... | 4 | ... | ... | | | |
| மொத்தம் ... | 281 | | ... | 449 | 11 | 1 |

| விவரம் | செலவு 1922 ஜனவரி | | | 1921 ஜனவரி | | |
|---|---|---|---|---|---|---|
| I GENERAL SECTION: | | | | | | |
| (1) ESTABLISHMENT:— | | | | | | |
| (a) மானேஜ்மெண்டு ஆபீஸ் சிப்பந்திசட்குச் சம்பளம் செல் .. | 121 | ... | ... | | | |
| (b) கலாசாலைஉபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ... | 107 | ... | ... | | | |
| (c) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல். ... | 45 | ... | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தாவரவு | 115 | ... | ... | | | |
| (2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தாவரவு ... | 196 | 14 | ... | | | |
| (3) 'செந்தமிழ்'ப் பழைய தொகுதிகள் விற்ற வகையில் வரவு ... | 32 | 13 | ... | | | |
| மொத்தம் ... | 344 | 11 | ... | 27 | 9 | ... |
| **III Press Section:** | | | | | | |
| (a) Printing Office: | | | | | | |
| (1) சங்கம்அச்சாபீசில் நடந்த வேலைகளுக்கு அச்சுக் கூலி வரவு ... | 263 | 2 | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (2) Stationery, contingencies வகையிற்செல் ... | 6 | 4 | 3 | | | |
| (3) பாண்டியன்புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தாச் செலுத்தியவகையிற் செலவு ... | 5 | 8 | ... | | | |
| (4) தபால், தந்திவகையிற் செலவு ... | 16 | 9 | ... | | | |
| (5) சங்கம் சில்லறைவேலைகள் சம்பந்தமாகஅச்சுக்கூலிபைண்டிங் கூலிவகையிற் செலவு ... | 10 | ... | ... | | | |
| (6) Miscellaneous செலவு ... | 1 | 1 | 6 | | | |
| மொத்தம் ... | 312 | 6 | 9 | 573 | 4 | 4 |
| **II Editorial Section:** | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச்சம்பளமசெல் | 35 | ... | ... | | | |
| (2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கப்பதிப்புப்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம் அச்சுக்கூலி வகையிற் செலவு ... | 64 | 14 | ... | | | |
| (3) தபால், தந்திவகையிற்செலவு | 32 | 4 | ... | | | |
| மொத்தம் ... | 132 | 2 | ... | 146 | 3 | 3 |

| | Rs | A | P | Rs | A | P |
|---|---|---|---|---|---|---|
| (2) ஷெ வேலைகட்காகக் காகிதக்கிரயம் வரவு ... | 63 | ... | ... | | | |
| (3) Miscellaneous வரவு .. | ... | 15 | ... | | | |
| (b) Binding Office: | | | | | | |
| (1) சங்கம் பைண்டிங் ஆபீசில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங்சார்ஜ் வரவு ... | 36 | 2 | ... | | | |
| மொத்தம் ... | 363 | 3 | ... | 205 | 10 | ... |

III Press Section:

| | Rs | A | P | Rs | A | P |
|---|---|---|---|---|---|---|
| (a) Printing Office: | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 159 | 9 | 11 | | | |
| (2) Stationery Contingencies வகையிற் செலவு ... | 101 | 15 | 6 | | | |
| (3) Miscellaneous செலவு ... | ... | 5 | ... | | | |
| (b) Binding Office: | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 29 | 9 | 7 | | | |
| (2) Stationery Contingencies வகையிற் செலவு ... | 68 | 12 | 3 | | | |
| மொத்தம் ... | 360 | 4 | 3 | 464 | 13 | 10 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ ... | 988 | 15 | ... | 682 | 14 | 11 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ ... | 298 | 13 | 5 | 1912 | 3 | 3 |
| ஆகமொத்தம் ரூ ... | 1287 | 12 | 5 | 2595 | 2 | 2 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஆக மொத்தம் செலவு ரூ ... | 804 | 13 | ... | 1184 | 5 | 5 |
| மாத முடிவில் மீதி இருப்புத் தொகை ரூ ... | * 482 | 15 | 5 | 1410 | 12 | 9 |
| ஆகமொத்தம் ரூ ... | 1287 | 12 | 5 | 2595 | 2 | 2 |

| | |
|---|---|
| *By C Pass Book | 4—8—9 |
| Cash on hand | 478—6—8 |
| | 482-15—5 |

*Audited and found correct,*

**V. S. RAMASWAMI,**

AUDITOR,
26—3—22.

**LAKSHMINARAYANAN,**

*Manager,*

MADURA TAMIL SANGAM.
2—2—1922.

# மதுரைத்தமிழ்ச்சங்கத்து

## 1922ஸ் பிப்ரவரிமாத வரவு செலவு கணக்கு.

| விவரம் | வரவு 1922 பிப்ரவரி | | | வரவு 1921 பிப்ரவரி | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) Donations, Contributions வகையில் வரவு ... | 60 | ... | ... | | | |
| (2) சங்கப்பரீக்ஷைக் கட்டணத் தொகை வரவு ... | 26 | ... | ... | | | |
| (3) சங்கத்தில் அச்சிட்ட புத்தகங்கள் விற்றவகையில் வரவு ... | 93 | 11 | 3 | | | |
| (4) Miscellaneous வரவு ... | 4 | ... | | | | |
| மொத்தம் ரூ ... | 179 | 15 | 3 | 15417 | 9 | 11 |

| விவரம் | செலவு 1922 பிப்ரவரி | | | செலவு 1921 பிப்ரவரி | | |
|---|---|---|---|---|---|---|
| I General Section: | | | | | | |
| (1) Establishment:— | | | | | | |
| (a) மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 118 | 7 | 9 | | | |
| (b) கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல் ... | 107 | ... | ... | | | |
| (c) கலாசாலைமாணவர்கட்குப் போஷணைக்காகச் செல் ... | 62 | 6 | 9 | | | |
| (d) Literary Section சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 65 | ... | ... | | | |
| (2) Stationery, contingencies வகையிற் செலவு ... | 6 | ... | 6 | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| II EDITORIAL SECTION: | | | | | | |
| (1) சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்து சந்தா வரவு ... | 103 | 14 | ... | | | |
| (2) 'செந்தமிழ்'ப்பத்திரிகைக்குச் சந்தா வரவு ... | 250 | 10 | ... | | | |
| (3) செந்தமிழ்ப் பழையதொகுதிகள் விற்ற வகையில் வரவு | 16 | ... | 9 | | | |
| மொத்தம் ரூ ... | 370 | 8 | 9 | 461 | 3 | ... |
| III PRESS SECTION: | | | | | | |
| (a) Printing Office | | | | | | |
| (1) சங்கம் அச்சாபீசில் நடந்த வேலைகளுக்கு அச்சுக்கூலி வரவு ... | 179 | 5 | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (3) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும்பத்திரிகைகுச் சந்தாவும், புத்தகத்திற்குக் கிரயமும் செல்லாக்கியது. | 3 | 4 | ... | | | |
| (4) தபால், தந்திவகையிற் செல் | 27 | ... | ... | | | |
| (5) முனிஸிபாலிட்டிக்கு வரி செல்லாக்கியது ... | 49 | 8 | ... | | | |
| (6) சங்கத்துச் சில்லறைவேலைகள சம்பந்தமாக அச்சுக்கூலி, பைண்டிங்கூலிவகையிற் செலவு | 66 | 12 | ... | | | |
| (7) சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாகச் செலவு ... | 80 | 13 | 3 | | | |
| (8) சங்கத்துக்கு வாங்கியிருந்த கடன் வகைக்குச் செல்லாக்கியது. | 38 | ... | ... | | | |
| மொத்தம் ரூ | 624 | 4 | 3 | 15297 | 12 | 10 |
| II EDITORIAL SECTION: | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 35 | ... | ... | | | |
| (2) செந்தமிழ்ப் பத்திரிகை, சங்கத்தில் அச்சிடும்புத்தகங்கள் சம்பந்தமாகக் காகிதம், அச்சுக்கூலி வகையிற் செலவு. ... | 20 | ... | ... | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (2) அச்சு வேலைகட்காகக் காகிதக் கிரயம் வரவு ... | 114 | 12 | ... | | | |
| (3) Miscellaneousவரவு ... | 2 | 4 | ... | | | |
| (b) Binding Office | | | | | | |
| (1) சங்கம் பைண்டிங் ஆபீஸில் நடந்த வேலைகளுக்குப் பைண்டிங் சார்ஜ் வரவு ... | 115 | 5 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 411 | 10 | ... | 292 | 15 | ... |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (3) தபால், தந்திவகையிற் செல் | 1 | 12 | ... | | | |
| மொத்தம் ரூ ... | 56 | 12 | ... | 159 | 1 | ... |
| III PRESS SECTION: | | | | | | |
| (a) Printing Office. | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 175 | 3 | 3 | | | |
| (2) Stationery Contingencies வகையிற் செலவு ... | 122 | 8 | 6 | | | |
| (b) Binding Office | | | | | | |
| (1) சிப்பந்திகட்குச் சம்பளம் செல் ... | 34 | ... | 6 | | | |
| (2) Stationery Contingencies வகையிற்செலவு ... | 14 | 4 | 3 | | | |
| மொத்தம் ரூ. ... | 346 | ... | 6 | 237 | 2 | 8 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகமொத்தம் வரவு ரூ. ... | 962 | 2 | ... | 16171 | 11 | 11 | ஆக மொத்தம் செலவு ரூ. | 1027 | ... | 9 | 15694 | ... | 6 |
| மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்புத்தொகை ரூ. ... | 482 | 15 | 5 | 1410 | 12 | 9 | மாதமுடிவில் மீதியிருப்புத் தொகை ... | * 418 | ... | 8 | 1888 | 8 | 2 |
| ஆகமொத்தம் ரூ. ... | 1445 | 1 | 5 | 17582 | 8 | 8 | ஆக மொத்தம் ரூ ... | 1445 | 1 | 5 | 17582 | 8 | 8 |

| | |
|---|---|
| *By C. Pass Book | 4—8—9 |
| Cash on hand | 413—7—11 |
| | 418—0—8 |

*Audited and found correct.*

**V. S. RAMASWAMI,**

AUDITOR.

26—3—22.

**LAKSHMINARAYANAN,**

*Manager.*


MADURA TAMIL SANGAM.

2—3—1922

(No. 1.)

# CHAMBERLAIN'S COLIC AND DIARRHŒA REMEDY.

வயிற்றுக்கடுப்பு, வாந்திபேதி, சீதபேதி இவைகளுக்கு சேம்பர்லேன் துரை கண்டுபிடித்த மருந்து.




இதனால்
வயிற்றுவலி, அதிசாரபேதி, சீதபேதி, வாந்திபேதி, வயிற்றுக்கடுப்பு முதலான குடல்நோய்கள் பலவும் ஒழியும்.

இந்த ஆச்சரியமான மருந்து, உலகத்திலுள்ள மற்ற மருந்துகளைவிட மனுஷகோடிகளுக்குதவியாய்நின்று, நோயையும் வேதனையையும் நீக்கி அநேக ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறது.

இம்மருந்தை ஒருதரம் குடித்தாலும், எவ்வித கொடிய வயிற்றுவலியும் போய்விடும். பொல்லாத சீதபேதிக்கும், மூன்றுதரம் குடித்தால் போதும்; அவ்வளவோடு வேதனை நீங்கும், வியாதியும் ஒழியும். எப்போதும் பலிக்கும் மருந்து, ஒருபோதும் தப்புவதன்று.

இது, மூலிகைகளால் ஆன மருந்து. கைபடாமல் செய்த மருந்து.

எங்கும் கிடைக்கும், சின்ன புட்டி ரூ. 1. பெரிய புட்டி ரூ. 2.